பதிவு எண் M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 23 } ஈரோடு 10-9-1949 சனிக்கிழமை } மலர் 1.

## ஆரியர் இயல்பு.

ஜர்மானியர்கள் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். நம் நாட்டுப் பார்ப்பனர்களும் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

இந்துமத ஆதாரங்களும் ஆரிய மதம், ஆரிய வேதம், ஆரியக் கடவுள்கள், ஆரிய மன்னர்களின் கதைகள் என்பதாகத்தான் இருந்துவருகின்றன.

புராண ஆராய்ச்சிக்காரர்களும், பண்டிதர்களும், சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும், பாரதம், ராமாயணம் மற்ற புராதனக் கதைகள் ஆகியவைகளில்வரும் சுரர், அசுரர் என்கின்ற பெயர்களையும், ராக்ஷதர்கள் தேவர்கள் என்கின்ற பெயர்களையும், ராமன் அனுமான் என்கின்ற பெயர்களையும், ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவையே பிரதானமாய்க் கொண்டவை என்பதாகவும் தீர்மானித்துப் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். மேல்நாட்டுச் சரித்திரக்காரர்களும், சிறப்பாக அரசாங்கத்தார்களும் மேல்கண்ட ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவை ஒப்புக்கொண்டு அந்தப்படியே ஆதாரங்கள் ஏற்படுத்திப் பள்ளிப் பாடமாகவும் வைத்து வந்திருக்கிறார்கள்.

அரசியல்காரர்களில் தீவிரக் கொள்கை கொண்ட தேசியவாதிகள், சமதர்மக்காரர்கள், பொதுவுடமைக்காரர்கள் என்று சொல்லப்படுகின்ற தோழர் ஜவகர்லால் நேரு போன்றவர்களும், தங்களது ஆராய்ச்சிகளில் ஆரியர் திராவிடர் என்கின்ற பிரிவுகளை ஒப்புக்கொண்டும், சரித்திரங்களில் இருந்துவரும் ஆரியர் திராவிடர் பிரிவுகளை ஒப்புக்கொண்டும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆரியர்களின் தத்துவம் எப்படி இருக்கிறதென்றால் இந்தியா அவர்களுடைய பூர்வீக நாடு என்று சொல்லுவதற்கில்லாமல் இருப்பதோடு, இந்தியாவில் ஆரியர்களுக்கு உள்ள சம்பந்தம் கேவலம் அய்ரோப்பாவிலும், ஆப்கானிஸ்தானத்திலும், அரேபியாவிலும், பர்சியாவிலும் இருந்து வந்து குடியேறின அய்ரோப்பியர், முகமதியர்கள், பார்சியர்கள் ஆகியவர்களுக்கு இருந்துவரும் பொறுப்பும், உரிமையும், மனிதாபிமானமும்கூட இல்லாதவர்கள் என்று சொல்லும்படியான நிலையில்தான் இருந்து வருகிறார்கள்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால்ஜர்மானியர்கள் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக் கொண்டு ஜர்மனி தேசத்திலுள்ள யூதர்களுக்கு ஜர்மனியில் இருக்க உரிமையில்லை என்று சொல்லி விரட்டியடித்த தன்மை போலத்தான் இந்தியாவிலுள்ள மக்களால் ஆரியர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.




ஜர்மனியர்கள் யூதர்களை விரட்டியடிப்பதற்குச் சொல்லிய காரணங்கள், இந்தியர்கள் ஆரியர்களை விரட்டியடிக்கலாம் என்பதற்குப் பொருத்தமானதாகவே இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

அதாவது ஜர்மனியர்கள் யூதர்களை விரட்டியடித்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் சொல்லுகிறார்கள்.

அவைகளில் ஒன்று, யூதர்கள் தங்களுக்கு என்று தேசமில்லாதவர்கள் என்றும், தேசமில்லாத (அதாவது ஜிப்ஸி—மலை சாதியார் லம்பாடிகள்—கூடாரத்தோடு திரிகிறவர்கள் போன்றவர்கள்) என்றும் அப்படிப்பட்டவர்களை ஒரு நாட்டில் வாழவிட்டால் அவர்கள் அந்த நாட்டின் வளப்பத்தையும் முற்போக்கையும் காட்டிக் கொடுத்து ஜீவிக்கிறவர்களாகி விடுவார்கள் என்பது.

இரண்டாவது, யூதர்கள் சரீரத்தில் பாடுபட மாட்டாதவர்கள்.

சரீரத்தினால் பாடுபடாதவர்கள் ஊரார் உழைப்பைக் கொள்ளை கொண்டு வாழுபவர்களாவார்கள் என்றும், ஊரார் உழைப்பால் வாழுகின்றவர்கள் மனித சமூகத்துக்கு க்ஷயரோகம் போன்ற வியாதிக்கு சமமானவர்கள் என்பதோடு தங்கள் சோம்பேறி வாழ்க்கைக்கு ஆக நாட்டையும் மனித சமூகத்

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

# ஊரார் உரையாடல்

காங்கரஸ் தோழன்:- டேய், இளங்கோ, இங்கே வா, என்ன, உன்னைக் காணுவதே கஷ்டமாக இருக்கே.........சரி. இப்போ நீ பெரியார் கட்சியா? அண்ணாதுரை கட்சியா?

திராவிடத் தோழன்:- உன் கிண்டலை இன்னும் விடவில்லையே, என்னடா கட்சியை கண்டவன். அண்ணாதுரை கட்சி எது? பெரியார் கட்சி எதுடா? எங்க கட்சி திராவிடக் கட்சி ஒன்னுதாண்டா. என்னமோ பிரமாதமாகக் கேட்க வந்துட்டே.

கா. தோழன்:-அட மண்டுகமே! இவ்வளவு தானா நீ, இங்கே வா இப்படி உட்காரலாம். இதோ பார்டா, உங்க அண்ணாதுரை இருக்காரே, அவரை சாதாரணமாக நினைச்சுடாதே. பெரிய அறிஞர். உங்க பெரியாரின் திராவிடக் கட்சிக்கு எதிராக ஒரு கட்சி ஆரம்பிக்கப் போராராம்.

தி. தோழன்:-எதுடா, அவங்களை நீயே பிரித்துவிடுவாய் போலிருக்கிறது. அந்தப்படியெல்லாம் எங்கள் கட்சியில் பிளவு ஏற்படாதுடா. வீட்டில் அப்பன் மகன் சண்டை போலடா. குடும்பத்தில் சச்சரவு ஏற்படுவது சகஜம்தானே. இதுக்கு முன்னேகூட, பெரியாரிடத்தில் மனஸ்தாபம் கொண்டு எங்கள் அண்ணா பிரிந்தருந்தார். ஆனால் மக்கள் இதேபோல் வாதம் செய்து கொண்டும், கிளர்ச்சி செய்து கொண்டும்தான் இருந்தார்கள். ஈரோடு மகா நாட்டிலே அண்ணா எனக்கும் பெரியாருக்கும் யாதொரு மனஸ்தாபமும் கிடையாது. இனி ஏற்படப் போவதுமில்லை. அப்படியிருந்தாலும் அது ஒரு ராஜ தந்திரமாக இருக்கலாம். அதற்காக நீங்கள் வீண் கிளர்ச்சியும், வீண் வாதமும் செய்து கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்க இவுங்கோ இப்படிப் பேசிக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கலே.

கா. தோழன்:-உம் அப்படியா. சொன்னார் இல்லையா? சரி இருக்கட்டும். தூத்துக்குடி மாநாட்டிலே, பெரியார் 'என் கட்சிக்கு முட்டாள்கள்தான் தேவை. அறிஞர்கள் தேவையில்லை என்று சொன்னாரா இல்லையா? என்ன இருந்தாலும் இந்த பெரியார் அப்பட்டமாக சொல்லியிருக்கக் கூடாது. ஆனால் உங்கள் தலைவர் முன்யோசனைக்காரர். உலக அனுபவசாலி. ஒவ்வொருவர் நெஞ்சிலும் இன்னதுதான் திட்டம் என்றதை அறிந்து கொள்கிறார். பெரியார் தென்னாட்டு மகாத்மாதான். இப்போது, மத்தியில் நிற்கமாட்டேன், ஓரமாக நிற்கப் போகிறேன் என்று அறிக்கை கொடுக்கும் சிகாமணிகளும், அறிஞர்களும் ஏன் அன்று தூத்துக்குடியிலே பிரிந்திருக்கக் கூடாது. அல்லது இப்போதுதான் இவர்களுக்கு முட்டாள் தன்மை மறைந்து அறிவுத் தன்மை உதித்ததா? இவ்வளவு நாட்கள் கூடியிருந்ததில்தான் இருக்கிறது அவர்களுடைய பாசறைத் திட்டம். ஈரோட்டில் பேசும்போது பகைமையை மறைக்க, ராஜதந்திரம் என்று சொல்லி மக்களை மடையர்களாக்கி இருக்கிறார் உங்கள் அண்ணா.

தி. தோழன்:-அது சரிடா, ஏது எங்க பெரியாரை ரொம்ப பிரமாதமாகப் பேசறே. நீதான் கதர் கட்டிய காங்கரஸ் தொண்டனாச்சே.

கா. தோழன்:-எங்கள் அப்பா பெரியாரைப்பற்றி அடிக்கடி சொல்வார்டா. அவர் உங்கள் இயக்கத்தை ஸ்தாபனம் செய்யப் பட்ட கஷ்டத்தையும், எந்தெந்த ஊரில் எவ்வளவு கற்களால் விரட்டப்பட்டார், இந்தப் பதக்கம் (தழும்பு) எந்த ஊரில் கொடுக்கபபட்டது என்று கேட்க வேண்டுமாம், எவ்வளவோ சொல்லடியும், கல்லடியும் பட்டவராம். ஒலிபெருக்கி இல்லாத ஊரில் பெரிய கூட்டமாகயிருந்தால் வயிறு வலிக்க வலிக்க கத்தி ஸ்தாபனம் செய்தவராண்டா. அவரைக் காங்கரஸிலிருந்து பிரியவிட்டிருக்கக் கூடாதுன்னு எங்கள் அப்பா அடிக்கடி சொல்வதுண்டு. அத்துடன் அரசியல் சமுதாய புரட்சி வீரர் என்று, எங்கள் அப்பா காங்கரஸ் கமிட்டித் தலைவராகயிருந்தபோது ஏற்படும் அரசியல் சந்தேகங்கள் தோன்றும்போது அவரை அணுகித்தான் தெளிவுபடுத்திக்கொண்டு வருவார். அப்படி வளர்த்த அவர் கட்சியை நேற்று வந்தவர்கள் கோடரி வைத்தால் முடியுமா? ஆசை வெட்கமறியாத செய்கைதான். பெரியாரைப் பற்றி உனக்குத் தெரியாதது எனக்குத்தெரிந்துவிடப் போகிறதா? எப்போதுமே அவரிடம் எனக்கு தனிப்பட்ட விசுவாசம் உண்டு. உங்கள் கட்சிக்குத் தன்னலமற்ற தலைவர் உண்டென்றால் அவர் ஒருவரைத்தான் சொல்ல முடியும்.

தி. தோழன்:- உண்மைதாண்டா, என்ன இருந்தாலும் அவர் இந்த 72வது வயதில் 32 வயது பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாதுதான். எங்கள் கொள்கைக்கே பொருந்தாது. இந்தப் பொருந்தா மணத்தால் தான் அவர் கெட்ட பெயரைச் சம்பாதித்துக்கொண்டார்.

கா. தோழன்:-......அப்படின்னு உங்க அண்ணா, திராவிட நாட்டில் அலங்கார நடையில் எதுகை மோனைகளை வைத்து அழகாக ஒப்பாரி பாடியிருக்கிறார்...ஏண்டா, முன் நான் சொன்னேனே திட்டம் அதற்கு ஆரம்ப நாள்டா. சமயத்திற்காகக் காத்திருந்தவர்டா; பெரியார் தவறி விட்டதாகவும் கற்பனை சொற்களால் சித்தரித்து இருக்கிறார்...ஏண்டா, நான் தான் கேட்கிறேன். உங்கள் அண்ணா, மணியம்மையைக் குறைந்தது 10 தரமாவது பார்த்துப் பேசியிருப்பாரா இல்லையா? ஏதோ காரணத்தைக் கொண்டுதானே உண்மை வயதை மறைத்து எழுதியிருக்கிறார். "பொருந்தா மணம்" என்று அழகாக எழுதியிருந்தாரே, எதுடா பொருந்தா மணம்? அவர் பெயர்ப் பொருத்தமும், அம்மையார் பெயர்ப் பொருத்தமும் சரியில்லையா? அல்லது அம்மையாருக்கு செவ்வாய் தோஷம் இருக்கிறது, ராகு, கேது நட்சத்திரங்கள் நல்ல பலனைக் கொடுக்காது என்று ஜாதகம் பார்த்து எழுதினாரா? அல்லது

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# குறள் ஆராய்ச்சி.

★

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"

மயக்கம் அளிக்கும் நற்செயல் தீச்செயல் ஆகிய இரண்டும் எழுத்தறிவித்தவனது உண்மைக் கருத்து கொண்ட புகழை எடுத்துரைத்தாரிடத்து உண்டாகாவாம். நற்செயல் தீச்செயல் இவ்விரண்டும் செய்வோருக்கு துன்பம். மனக்குழப்பம் ஏற்படத்தான் செய்யும். காந்தியாருக்கும் கோட்சேயிக்கும் துன்பமும் மனக்குழப்பமும் இருக்கத்தான் இருந்தது. ஆனால் எழுத்தறிவித்தானிடத்துக் காணும் புகழ் கண்டாரிடத்து அத்துன்பமும் மனக்குழப்பமும் அதிகமாக இன்னல் அளிக்காது. எப்படி எனின் எழுத்தறியா மக்களிடம் எத்துணை துன்பமும் மனக்குழப்பமும் எழுத்தறிவித்தவன் மேற்கொண்டிருப்பான் என்று உணருங்கால் ஆகும். மனத்திடம் கொள்வார் என்பதே ஆகும். கல்வி அறிவும் நாகரிகமும் உடைய இக்காலத்தும் கடவுளின் கயவாளித்தனம் இன்னின்ன என்று எடுத்துக் காட்டும் திராவிடக் கழகத்தார், தற்போது ஏற்படும் எத்தனையோ எதிர்த்தாக்குதல்களுக்கு குழம்பாத மனத்திடம் கொண்டிருப்பதற்குக் காரணம் பெரியாரின் அறிவுத் திறன் கண்டு அவர் அடிபற்றி பணியாற்றுவதாலன்றோ! இவ்வுதாரணமே இக் குறளுக்குப் பொருந்தும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

பொறிவாயில் ஐந்தவித்தான்என்பது கடவுளை அல்ல. பொறிவாயில் ஐந்தவித்த யோக்கியதையைக் காட்டும் புராணங்கள். அதற்குப் பொய்தீர்ந்த ஒழுக்கம் இருப்பதும் காணக்கிடைக்காது. அவன் அடி பற்றிய பக்தர்களின் யோக்கியதையும் நாம் அறிவோம். கடவுள் கேட்டான் எனத் தன் மனைவியைக் காட்டிக் கொடுத்த கல்வி அறிவும் ஒழுக்கமும் அற்ற தன்மைதான் காணக்கிடைக்கிறது.

பொறிவாயில் ஐந்தவித்தான் எவனுமில்லை. அவிக்க முயன்றால் இறப்பைத் தேடுகிறான் என்பதே ஆகும். ஆகவே பொறிவாயில் தோன்றும் இச்சைகளை தனக்கெனமட்டும் நாடித்திரியாது நாட்டுக்கு நன்மை பயக்கும் விதத்தில் கல்வி அறிவைப் புகட்ட முற்பட்ட சீர்சான்ற ஒழுக்கம் கொண்ட எழுத்தாக்கியோன் வழி நிற்றலால் நல்ல புகழ் கொண்டு வாழ இயலும் என்பதே தக்க கருத்தாகும்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

கற்றவனுக்கும் கல்லாதவனுக்குமே ஒப்புக்கூற இயலாது. அதிலும் கல்வி அறிவுபெற எழுத்துக்களை ஆக்கியவன் மேலும் சிறப்புடையவன். ஆகவே கல்லாதவனுக்கும் கற்றவனுக்கும் மேற்பட்ட சிறப்புடையவன் எழுத்தாக்கியவன். இதற்காகவே தனக்குவமை இல்லாதவன் என்று குறிப்பிடுகிறார் வள்ளுவர். அவனடி சேர்தல்—அவன் காட்டிய மொழிவழி உண்மை அறிவு—பகுத்தறிவு பெறுவதால் மனக்கவலை மாற்ற இயலும். ஆகையால் அவன் அடி சேரவேண்டும்.

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

கடமைக் கடலை வெளியிட்ட அழகிய குளிர்ச்சி தன்மையினன் (அந்தணர் என்போர் அறவோர்) தாளை சேர்ந்தாரன்றி மற்றோர் பிறவாகிய பொருள் ஆழி, இன்ப வாழிகளைக் கடத்தல் இயலாது. மொழி ஆக்கியோன் சுவடு பற்றி கடமை வழி நின்றொழுகாதவர் சுலபமாக பொருள், இன்பக் கடல்களைக் கடக்கமாட்டார். அதாவது பொருள், இன்பம் அடையமாட்டார் என்பதாம். அரிது என்பதன் வழியாக மற்றோர் பொருளும், இன்பமும் அடையவே முடியாது என்பது கருத்தல்ல. மற்றோர் சிரமத்துடன் அடையலாம். அவன் அடி பற்றியோர் சுலபமாக அடைவர் என்பதேயாம்.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

எண்குணத்தான் என்பதற்கு எட்டு குணத்தை உள்ளவன் என்றும் கடவுள் என்றும் பிதற்றுகின்றனர். கடவுள் ஆயினும் மற்றவன் ஆயினும் அவனுக்கு எட்டுக் குணங்கள்தான் உண்டு என்று வரையறுத்துக் கூறுவது எவ்விதம் தகுதியானது. ஆகவே எண்குணம் என்பதற்கு மதிக்கத்தக்க அளவில் குணங்கள் உடையவன் என்று கொள்வதே அறிவுடைமையாகும். மதிக்கத்தக்க குணங்களை உடைய எழுத்தாக்கியோன் அடிகளை வணங்காத் தலையில் உள்ள பொறிகளாலும் அவை கொள்ளும்புலன்களாலும் எவ்விதப் பயனும் குணமும் இல்லை என்பதாம். மெய் என்பது தலையையும் சேர்த்ததே. ஆகவே தலையிலேயே ஐம்பொறிகளும் அவைமூலமாகப் புலன்களும் ஏற்படுகின்றன. அதனால்தான் நான்கு தனிப்பொறிகளும் மெய்யில் சிறந்ததுமான தலையைக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்.

நீந்துதற்குப் பழகியவன்—மிக மிக நன்றாகப் பழகியவன் கடலில் நீந்தமுடியும், கொஞ்சம் பழகியவரும், கொஞ்சமும் பழகாதவரும் நிச்சயமாகக் கடலில் அமிழ்ந்து விடுவர்.

வாழ்க்கை ஒரு பெருங்கடலாகும். கடலில் பெரும் மீன், திமிங்கலம், சுழல், சூறாவளி, பாறை முதலிய பல இருந்து கப்பலைக் கவிழ்க்கும். வாழ்க்கைக் கடலில் அதுபோலவே பல இன்னல்கள் ஏற்படுகிறது. பிறவி என்று குறிப்பிடுவதில் இங்கு மனிதப் பிறவியைத்தான் குறிக்கும். மனிதன் அல்லாத ஏனைய பிறவிகளுக்குப் பகுத்தறிவு இல்லை. பகுத்தறிவு இருப்பதினாலேயே இன்பதுன்பங்களில் மனம் பதிந்து சந்தோஷமும் துக்கமும் அடைகின்றான். வரப்போகும் காலத்தில் மனதை ஈடுபடுத்தி அதிகமாக கவலை கொள்கின்றனர். கவலையால் மக்கள் விரைவில் அழிகின்றனர். அழியாவிடினும் நடைப்பிணமாக வாழ்ந்து மாய்

இங்கர்சால் சொற்பொழிவு.

# உண்மை.

தமிழாக்கம்: மா. சூ. நெடுஞ்சேரலாதன்

எண்ணற்ற கோடி ஆண்டுகளாக, எண்ணற்ற முறைகளிலே தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள, தன் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள, தன் பசியைத் தணித்துகொள்ள, மனிதன்மெல்ல மூளையை விருத்தி செய்து, தன் கால்களில் இரண்டை கரங்களாக மாற்றிக்கொண்டு, இருண்ட தன் மூளையிலே, அறிவின்—சிந்தனையின் ஒளியை புகுத்திக் கொண்டான். உண்மையை—மெய்ப்பொருளை அவன் கண்ட பின்பே, தன்னை அறியாமையினின்றும், பயத்தினின்றும், தவறுகளினின்றும், நீக்கி முன்னேற ஆரம்பித்தான். எண்ணற்ற ஆண்டுகளாக அவன் குதித்தும், ஊர்ந்தும்; உழன்றும், ஏறியும், வீழ்ந்தும் ஒளியை நோக்கி முன்னேறினான். அவனைத் தொணதொணப்பாளரும், நபிகளும், போப்புகளும், பாதிரிகளும் நீக்கியும், நிறுத்தியும், ஏமாற்றியும் வந்தார்கள். அவனைத் துறவிகள் ஏமாற்றினர். கிறிஸ்துவும் அவர் தம் தூதுவரும் தவறு வழிகளில் அழைத்துச் சென்றனர்; பேயும், பிசாசும் பயமுறுத்தின; தலைவர்களும், மன்னர்களும் அடிமைப் படுத்தினர்; கோயிலும், (செங்) கோலும், கொள்ளையிட்டன. கல்வியின் பெயரால் தவறுகளையும்; அதிசயங்களையும், பொய்மையையும்; முடியாதவைகளையும்; புரியாதவைகளையும்; பெருமையற்றவைகளையும் அவன் மூளையிலே நிரப்பி விட்டனர். மதத்தின் பெயரால் இகழ்ச்சியையும், உத்தேசித்தலையும்; காதலையும், வெறுப்பையும்; மன்னித்தலையும், எதிர்த்தலையும் அவனுக்குப் போதித்தனர்.

ஆனால் உலகம் மாற்றம் எய்துகின்றது. நாம் காட்டுமிராண்டி விவிலிய நூற்களாலும் அநாகரீகக் கோட்பாடுகளாலும் களைப்புற்று இருக்கின்றோம்.

வாழ்க்கையிலே எழும் தவறுகளையும், இருளையும் கண்டு நீக்கி, பொலிவுறும் உண்மையை நிலை நாட்டுவதினும் சிறந்தது எதுவுமில்லை; முக்கியமானதும் ஒன்றுமில்லை.

உண்மை, உலகின் அறிவுச்செல்வமாகும்.

உண்மையைக் கண்டு பிடிப்பதே சிறந்த தொழிலாகும்.

முன்னேற்றத்தின் அடிப்படையும், ஒளிரும் கோபுரமும் உண்மையேயாகும்.

உண்மை மகிழ்ச்சியின் தாய்! உண்மையே மக்களை நாகரீகப் படுத்தி, நேர்மையாளராகவும், தூய்மையானவர்களாகவும், ஆக்குகின்றது. மனித உள்ளத்துள் குடிபுகத்தகுதியுள்ள சிறந்த அவா, உண்மையை அறிவதொன்றேயாகும்.

உண்மை நன்மைக்கான சிறந்த சக்தியை மக்களுக்கு நல்குகின்றது. உண்மை வாளும், கேடயமுமாகும். அதுதான் உள்ளத்தின் புனித ஒளியாகும்.

உண்மை ஒன்றைக் கண்டுபிடிக்கும் மனிதன் ஒருவன், ஒளிரும் விளக்கொன்று ஏற்றுபவனாவான்.

உண்மையை ஆராய்ச்சியினாலும், சோதனையினாலும், சிந்தனையினாலும்தான், கண்டுபிடிக்க முடியும்.

ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் ஆசை—அவன் சக்திக்குத் தகுந்தளவு ஆராய்வதற்கு உரிமையளிக்கப்பட வேண்டும். உலக இலக்கியங்கள் அவனுக்குத் திறக்கப்பட வேண்டும்-எதுவும் தடைப்படுத்தவோ, மூடவோ, மறைக்கப்படவோ கூடாது. எக்கருத்தும் அறிய முடியாத அளவு புனிதமாக இருக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் விருப்பமான முடிவுக்கு வரவும், அந்நேர்மையான சிந்தனையை முடிவைகூறவும்உரிமை அளிக்கப்பட வேண்டும்.

இங்கோ அன்றி இதற்கு மேற்பட்டோ தண்டிக்கப்படுவர் என்று ஆராய்ச்சியாளரை அச்சுறுத்தினவர்கள் மனித இனத்தின் எதிரிகளாவர். ஆராய்ச்சியாளருக்கு இலஞ்சம்போல் அழிவிலா மகிழ்ச்சியை வாக்களித்துத் தவறு வழி செலுத்த முயலுவோர் துணை மக்கட்கு எதிரியாவர்.

உரிமையின்றி உண்மைஆராய்ச்சி முடியாது—கடவுள் பயம்—மனித பயம் இதனின்றும் உரிமை கிடைத்தாக வேண்டும்.

ஆகவே எல்லா ஆய்வுரைகளும்- எல்லா சோதனைகளும், சிந்தனையின் ஒளியிலே நடத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே—தன் உள்ளொளிக்கு உண்மையுடையவனாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும், தன்மூளை என்னும் ஆய்வுச் சாலையில், தன்னந் தனியாக உண்மை என்றறையப்படும் உலக விரிவுரையைச் சோதித்தல் வேண்டும். சிந்தனையின் முடிவில் தோன்றிய உண்மையே தலைவனாகவும், வழிகாட்டியாகவும் அமைய வேண்டும்.

நல்லுள்ளமும், சிந்தனையின் தூய்மையும், உண்மையை விரும்புவதால் பெறப்படுவனவாகும். இதுதான் உண்மையான மனிதத் தன்மை. இதுதான் உரிமை.

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கின்றனர்.

நடைப்பிண வாழ்க்கையை மாற்றி இன்பமாக வாழ்ந்து பிறவியைக்கழிக்க உதவுவது கல்வி. அதைக் கற்பித்தவன் இறைவன். அவன் அடிபற்றிக் கல்வி பயின்றோர் தங்கள் பிறவிக்கடலை இன்பமாகக் கடப்பர். கல்வி கல்லாதார் அதாவது எழுத்தாக்கியோன் அடிபற்றிச் செல்லாதவர், தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் இன்பத்தில் ஆழ்ந்தும் துன்பத்தில் ஆழ்ந்தும் ஒரு தன்மையாய் இல்லாதிருந்து செல்வர். ஆகவே நன்றாக மொழி பயின்று மொழி ஆக்கியோன் அடிபற்றிச் சென்றோர் தங்கள் வாழ்வில் இன்பதுன்பமிரண்டையும் சமமாக நினைந்து கவலையின்றி கழித்து விடுவர் என்பதேயாகும்.

—அ. திருவேங்கடம்.

# ★ கடவுள் ★

வினா:- கடவுளைப்பற்றிப் பொதுவாக ஜனங்கள் கொண்டிருக்கும் கருத்துக்களை விளக்கிக்கூறு.

விடை:- கடவுள் வான மண்டலத்தையும், பூமியையும், அதிலுள்ள சகல சராசரங்களையும் படைத்தவன் என்று மக்களில் பெரும்பாலார் நம்புகிறார்கள்.

வினா:-அப்புறம்?

விடை:-கடவுள் சர்வஞானமுடையவனாம், யாவற்றையும் பார்க்கிறானாம். பிரபஞ்ச முழுதும் அவனது உடமையாம். சர்வவியாபியாம்.

வினா:- கடவுள் ஒழுக்கத்தைப் பற்றி ஜனங்கள் என்ன சொல்லுகிறார்கள்?

விடை:- அவன் நீதிமானாம்; புனிதனாம்.

வினா:-வேறு என்ன?

விடை:- அவன் அன்பு மயமானவனாம்.

வினா:- கடவுள் அன்பு மயமானவனென்று ஜனங்கள் எப்பொழுதும் நம்புகிறார்களா?

விடை:- இல்லை. மக்கள் அறிவும் ஒழுக்கமும் உயர உயர கடவுள் யோக்கியதையும் விருத்தியடைந்து கொண்டே போகிறது.

வினா:- உன் கருத்தை நன்கு விளக்கிக்கூறு.

விடை:- காட்டாளன் கடவுள் ஒரு காட்டாளனாகவும், திருடனாகவும் இருந்தான். அராபித் தலைவன் கடவுளான ஜாப் ஒரு கீழ் நாட்டு யதேச்சாதிகாரியாக இருந்தான். யூதர்கள் கடவுள் போர் வெறியனாயும் பழிக்குப் பழிவாங்கும் குணமுடையவனாகவும் இருந்தான். கிறிஸ்தவர் கடவுளோ அற்பாயுளுடைய மக்கள் செய்யும் குற்றங்களுக்கு நித்திய நரக தண்டனை வழங்கக்கூடியவனாக இருக்கிறான்.

வினா:- கடவுளைப்பற்றிய வேறு அபிப்பிராயங்கள் என்ன?

விடை:- மக்கள் மனோ வாக்குக் காயங்களினால் செய்யும் காரியங்களில் அவன் சிரத்தையுடையவனாக இருக்கிறானாம்.

வினா:-ஏன்?

விடை:- அவனுக்கு விருப்பமான காரியங்களை நாம் செய்தால் பரிசளிக்கவும் விருப்பமில்லாத காரியங்களைச் செய்தால் தண்டனையளிக்கவும்.

வினா:- கடவுளுக்கு என்ன என்ன பெயர் வழங்கப்பட்டிருக்கின்றன?

விடை:- ஒவ்வொரு தேசத்தாரும் கடவுளை ஒவ்வொரு பெயரால் அழைக்கிறார்கள். கிரேக்கர்கள் ஜ்யூயஸ் என்றும், ரோமர்கள் ஜோவ் என்றும், பார்சிகள் ஆர்முஸ்ஜித் என்றும், ஹிந்துக்கள் பிரம்மம் என்றும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஜிஹோவா என்றும், முகமதியர் அல்லா என்றும் கடவுளை அழைக்கிறார்கள்.

வினா:- கடவுளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேறு பெயர்கள் எவை?

விடை:- பரம்பொருள், அனந்தன், மூலகாரணன், பரமாத்மா, நித்திய சக்தி, பிரபஞ்சம், இயற்கை, மனம், ஒழுங்கு முதலியன.

வினா:- ஆனால் ஜனங்கள் சொல்லும் கடவுள் ஒரே பொருளைத்தானா குறிக்கிறது?

விடை:- இல்லை. சிலர் கடவுளை ஒரு ஆளாக பாவனை செய்கிறார்கள். சிலர் கருத்தெனக் கூறுகிறார்கள். வேறு சிலர் சட்டம் என்கிறார்கள். மற்றும் அறிய முடியாத ஒரு சக்தி என்கிறார்கள். ஒரு கூட்டத்தார் கடவுள் பூரணன் என்கிறார்கள். பின்னும் சிலர் ஜடப் பொருளும், மனமும் அய்க்கியப்படும் நிலையே கடவுள் என நம்புகிறார்கள்.

வினா:- மக்கள் எப்பொழுதும் ஒரே கடவுளில் நம்பிக்கை வைத்து வந்திருக்கிறார்களா?

விடை:- மக்களில் பெரும்பாலார் ஒரே கடவுள் அல்லது பல கடவுள்கள் இருப்பதாக நம்பியே வந்திருக்கிறார்கள்.

வினா:-ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளுண்டா?

விடை:- பல கடவுள்கள் உண்டென்றே பொதுவாக நம்பப்படுகிறது.

வினா:- பல கடவுள்களை நம்புகிறவர்களுக்கு என்ன பெயர் அளிக்கப்படுகிறது?

விடை:- பல கடவுளை நம்புவோர் பல தெய்வ வாதிகள்; ஒரே கடவுளை நம்புவோர் ஏக தெய்வ வாதிகள்.

வினா:- சில பல தெய்வவாதிகளின் பெயர் சொல்லு.

விடை:- எகிப்தியர், ஹிந்துக்கள், கிரேக்கர், ரோமர்.

வினா:- ஏகதெய்வ வாதிகள் யார்?

விடை:- யூதர்கள், கிறிஸ்துவர்கள், முகமதியர்கள்.

வினா:- இவர்கள் எல்லாம் எப்பொழுதுமே ஏக தெய்வவாதிகளாக இருந்தார்களா?

விடை:- இல்லை ஆதியில் எல்லா ஜாதியாரும் பல தெய்வங்களையே வணங்கி வந்தார்கள்.

வினா:- பல தெய்வ வாதிகளின் கடவுள்கள் எவை?

விடை:- சூரியன், சந்திரன், ஆவிகள், நிழல்கள், பூதங்கள், பேய் பிசாசுகள், மிருகங்கள், மரங்கள், மலைகள், பாறைகள், நதிகள் முதலியன.

வினா:- இவைகள் எல்லாம் கடவுளாக நம்பப்பட்டதாய் உனக்கு எப்படித் தெரியும்?

விடை:- எப்படியெனில் ஜனங்கள் அவைகளை வணங்குகிறார்கள்; அவைகளுக்கு ஆலயங்கள் கட்டினார்கள்; விக்கிரகங்கள் உண்டுபண்ணினார்கள்; அவைகளுக்கு பூஜைகள் நடத்தினார்கள்.

வினா:- இந்த தெய்வங்கள் எல்லாம் ஒரே மாதிரி மகிமையுடையனவென்று ஜனங்கள் நம்பினார்களா?

விடை:- எல்லாக் கடவுள்களுக்கும் மேலான ஒரு கடவுளுக்கு அவை அடிமைகள் அல்லது சின்னங்கள் என்று அறிவாளிகளான சொற்பப் பேர் நம்பினார்கள்.

வினா:- அறிவில்லாதவர்களோ?

விடை:- அவைகளில் சில அதிக சக்தியுடையவை என்றும், சில கருணையுடையவை என்றும், சில அழகானவை என்றும், சில அதிக புத்தியுடையவை என்றும் நம்பினார்கள்.

வினா:- கடவுள் உற்பத்திக்கு அவர்கள் என்ன காரணம் கூறுகிறார்கள்?

விடை:- கடவுள் உற்பத்திக்குப் பல விதமான காரணங்கள் கூறப்படுகின்றன.

வினா:- அவற்றுள் சிலவற்றை விளக்கு.

விடை:- முதற்காரணம், ஆதிகால மக்கள் அறிவில்லாதவர்களாயும் குழந்தைகளைப் போல் பயங்காளிகளாயும் இருந்தார்கள். எனவே தனக்கு அறியமுடியாதவைகள் மீது அவர்களுக்குப் பயமுண்டாயிற்று. கண்ணால் காணமுடியாத ஏதோ ஒன்றே பயத்தை உண்டுபண்ணுகிறதென்று நம்பினார்கள்.

இரண்டாவது:- மக்கள் பலவீனராயும் உதவியற்றவராயுமிருப்பதினால் அவர்களுக்கு உதவியளிக்கக்கூடிய சர்வ சக்தியுடையவொன்று இருக்க வேண்டுமென்று நம்பினார்கள்.

மூன்றாவது:- மனிதன் இயல்பாக நேசமனப்பான்மையுடையவன். பிறருடன் கலந்து பழகவே அவன் எப்பொழுதும் விரும்புகிறான். எனவே தன்னைச் சூழ்ந்திருக்கும் அறிய முடியாத சக்திகளை அறியவும், அவற்றுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளவும் விரும்புகிறான். இறுதியில் அறியமுடி

யாத சக்திகளைக் கடவுளாக உருவகப்படுத்திக் கொள்கிறான்.

நான்காவது:- தெய்வநம்பிக்கைக்கு மரணமே முக்கிய காரணம்.

வினா:- அது எப்படி?

விடை:- நமக்கு உலகத்தில் சிரஞ்சீவியாக வாழ முடியுமானால் தெய்வங்களைப்பற்றியோ, தெய்வீக சக்திகளைப்பற்றியோ நினைக்கத் தேவையே உண்டாகாது. மரணம் உண்டு என்ற உணர்ச்சியினாலேயே மறுஜென்மத்தைப்பற்றியும், பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாக இருக்கும் ஒன்றைப்பற்றியும் யோசிக்கவேண்டியதாக ஏற்படுகிறது. பிராணிகளுக்கு மரணத்தைப்பற்றிய சிந்தனையே இல்லாததினால் கடவுளும் இல்லை.

வினா:- தெய்வங்களின் தொகை பெருகிக்கொண்டே போகிறதா?

விடை:- இல்லை. அது குறைந்து கொண்டே போகிறது.

வினா:- ஏன்?

விடை:- மக்களது அறிவும் சக்தியும் வளர வளர தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ள முடியுமென்ற நம்பிக்கை விருத்தியடைகிறது.

வினா:- அறிவில்லாதவர் கடவுள்களைவிட அறிவுடையோர் கடவுள் குறைவா?

விடை:- ஆம். நாகரீகமில்லாதவர்களே பல தெய்வங்களை வணங்குகிறார்கள்.

வினா:- ஏக தெய்வவாதிகள் நிலைமை என்ன?

விடை:- இப்பொழுதும் பெரும்பாலார் ஏக தெய்வ நம்பிக்கையுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

வினா:- கடவுள் நம்பிக்கையே இல்லாதவர்களும் இருக்கிறார்களா?

விடை:- ஆம். அதிகம் பேர் இருக்கிறார்கள்.

வினா:- அவர்கள் ஏன் கடவுளை நம்பவில்லை?

விடை:- பொதுஜனங்கள் சங்கற்பப்படியுள்ள கடவுள் நமது அறிவுக்கு அதீதமானதென்று அவர்கள் கூறுகிறார்கள்.

வினா:- கடவுள் உண்மையை நிருபித்துக் காட்ட முடியாதா?

விடை:- சிலர் முடியும் என்கிறார்கள். சிலர் முடியாது என்கிறார்கள்.

வினா:- கடவுளுண்மைக்கு கூறப்படும் ஆதாரங்கள் எவை?

விடை:- முதல் ஆதாரம் காரண காரிய வாதம்.

வினா:- அதை விளக்கிக்கூறு.

விடை:- எதற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும். எனவே பிரபஞ்சத்துக்கும் ஒரு கர்த்தா இருக்கவேண்டும். அந்த கர்த்தாவே கடவுள்.

வினா:- இது ஒரு பலமான வாதமில்லவா?

விடை:- பலமான வாதந்தான், ஆனால் முடிவானதல்ல.

வினா:- ஏன்?

விடை:- யாவற்றிற்கும் ஒரு காரணமிருக்க வேண்டுமானால் கடவுளுக்கும் ஒரு காரணமிருக்க வேண்டுமே.

வினா:- கடவுள் அனாதியாக இருக்கக் கூடாதா?

விடை:- காரணமில்லாமலே கடவுளுக்கு இயங்க முடியுமானால் காரணமில்லாமல் காரியமில்லை என்ற வாதமே அடியற்று வீழ்ந்துவிடுகிறது.

வினா:- அப்புறம்?

விடை:- காரணமின்றி அனாதி காலமாக கடவுள் இயங்க முடியுமானால், பிரபஞ்சமும் எக்காரணமுமின்றி அனாதி காலமாக் இயங்க முடியும்?

வினா:- கடவுளுக்கும் ஒரு காரணமுண்டு என சம்மதித்தால் என்ன கஷ்டம் வந்துவிடப் போகிறது?

விடை:- அப்படியானால் அந்தக் காரணத்துக்கு மூலகாரணமென்னவென்று ஆராய வேண்டியதாக ஏற்படும். அவ்வாறு ஆராயத் தொடங்கினால் முடிவே ஏற்படாது.

வினா:- வேறு வாதமென்ன?

விடை:- பூரணத்துவவாதம்.

வினா:- அது என்ன? விளக்கிக் கூறு.

விடை:- அதாவது நாம் அபூரணராக இருந்தாலும் (குறைபாடுடையவர்களாக இருந்தாலும்) பூரணமான ஒரு பொருள் உண்டென்ற உணர்ச்சி நமக்கு இருந்து கொண்டு இருக்கிறது. அந்த உணர்ச்சி அந்தப் பூரணப் பொருளின் சாயல் என்று நம்பப்படுகிறது.

வினா:- அதனால் நாம் ஊகிக்க வேண்டியதென்ன?

விடை:- அந்த உணர்ச்சி நமது உள்ளத்து இருந்து கொண்டு இருப்பதினால் அதற்கு ஆதாரமாக ஒன்று இருக்க வேண்டுமென்றும், அதுவே கடவுள் என்றும் ஊகிக்க இடமிருக்கிறது.

வினா:- மேலும் கொஞ்சம் விளக்குக.

விடை:- ஒரு பூரண வஸ்துவின் பிரதிபிம்பம் நமது உள்ளத்துத் தோன்ற வேண்டுமானால் அது உள் பொருளாக இருக்க வேண்டும். அது உள் பொருளாக இல்லையானால் பூரணமாக இருக்க முடியாது.

வினா:- அப்படியானால் முடிவு என்ன?

விடை:- கடவுளைப் பற்றிய உணர்ச்சி நமக்கு இருப்பதினால் கடவுள் ஒன்று இருக்கவேண்டும். அப்படி ஒன்று இல்லையானால் நமக்கு அந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கவே செய்யாது என்பதுதான் முடிவு.

வினா:- இந்த வாதம் சரியானது தானா?

விடை:- முதல் வாதத்தைப்போல இது அவ்வளவு உறுதியானதல்ல.

வினா:- ஏன்?

விடை:- பூரணத்துவம் ஒரு குணம். உண்மை ஒரு நிலைமை. அவை இரண்டும் சம்பந்தமற்றவை. ஒரு பெரிய பட்டணம் கடலில் ஆழ்ந்து கிடப்பதாகவோ, மேக மண்டலத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவோ நமது உள்ளத்து ஒரு உணர்ச்சி ஏற்படலாம். ஆனால் அப்பேர்பட்ட ஒரு பட்டணம் இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அதுபோல ஒரு பூரண வஸ்துவைப் பற்றிய உணர்ச்சி நமக்கு இருப்பதினால் ஒரு பூரண வஸ்து இருக்க வேண்டுமென்ற கட்டாயமுமில்லை.

வினா:- வேறொரு உதாரணத்தினால் விளக்கிக்காட்டு.

விடை:- பூமி பரந்திருப்பதாக வெகு காலம் மக்கள் நம்பி வந்தார்கள். அந்த உணர்ச்சி உலகத்தின் பிரதிபிம்பமாக இருக்க முடியாது. ஏனெனில் பரப்பான பூமி இல்லவே இல்லை.

வினா:- அப்படியானால் பூரண வஸ்துக்களும் அபூரண வஸ்துக்களும் நமது மனோ கற்பிதம்தானா?

விடை:- ஆம்.

வினா:- அடுத்த வாதம் என்ன?

விடை:- அடுத்தது உருவகவாதம்.

வினா:- அதை விளக்கு.

விடை:- வினாடி, நிமிஷம், மணி காட்டும் முறையில் ஒரு கடிகாரம் உருப்படுத்தப்பட்டிருப்பதினால் அது ஒரு நோக்கத்துடன் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதென்றும், அதற்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டுமென்றும் நாம் அறிகிறோம். அதுபோலவே உலகமும் ஒரு நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்பட்டிருப்பதினால் அதற்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டும். அந்த கர்த்தாவே கடவுள்.

வினா:- இந்த வாதம் எப்பேர்ப்பட்டது?

விடை:- கடிகாரத்தை உலகத்துக்கு உவமையாகக் கூறமுடியாது. கடிகாரம் எதற்காக உண்டுபண்ணப்பட்டதென்று கூறிவிடலாம். ஆனால் உலகம் எதற்காக உண்டுபண்ணப்பட்டதென்று கூறுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

வினா:- பிரபஞ்ச அமைப்பு கடிகார அமைப்புப்போல அவ்வளவு தெளிவானதல்லவா?

விடை:- தெளிவாக இருந்தால் இரகசியங்களுக்கு இடமே இல்லை.

வினா:- கடிகாரத்தைப் பற்றி நாம் பூரணமாக அறிந்திருப்பதுபோல பிர

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# ஏமாந்து போகாதீர்!

★

உண்மையான ஒரு பொருளைப் போலவே சகல விதத்திலும் தோற்றமளித்து, அதன் அதன் அடிப்படைக் குணங்களிலே மாறுபடுகின்ற மற்றொரு பொருளையே "போலி" என்கிறோம். "உண்மைக்கும் உத்திரவாதத்திற்கும் உறைவிடமாகிய எங்கள் 'கம்பெனி'யால் தயாரிக்கப்பட்டதா வென்று பார்த்து வாங்குங்கள். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்" என வியாபாரத்திற்காக விளம்பரம் செய்வதைப் பார்த்திருப்பீர்கள். சரக்குகள் வாங்கச் செல்வோர் போலிச் சாமான்களை வாங்கிப் பொருள் நட்டம் அடையாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். போலிச் சாமான்களை நல்லவை என எண்ணி வாங்குகிறவர்கள் ஏமாறுவதால் அவர்களை எச்சரிப்பது போலவே நாமும் தற்காலக் கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறோம். ஆனால் ஒரு வித்தியாசம். அதாவது இவர்கள் எத்தகைய போலிப் பொருள்களைக் கண்டும் ஏமாற வேண்டியில்லாமல் தாங்களே போலிகளாக உள்ளனர். ஆகவேதான் 'போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்' எனக் கூறுவதற்குப் பதிலாக, 'போலிக் கிறிஸ்துவர்களே ஏமாந்து போகாதீர்' என்றோம்.

ஏன் இன்றையக் கிறிஸ்துவர்களைப் போலிகள் என்றோம்? அவர்கள் அடிப்படைக் குணங்களில் மாறுபடுவதாலேயேயாம். கிறிஸ்தவன் என்பவன் மக்களை மடமையினின்றும் விடுவித்து, மூடப்பழக்கங்களினின்றும் மீளச் செய்து, அறியாமை அகன்று அறிவில் வளர, பாடுபட்டு, மக்கள் சமூகத்தைச் சீர்திருத்திச் செப்பனிட்ட ஆதிசீர்திருத்தவாதி ஏசுவின் போதனைகளை அன்றாட வாழ்க்கையில் கையாளுகிறவனே. இன்றுள்ள கிறிஸ்தவர்களில் ஒருவரேனும் உண்மையில் ஏசுவின் சத்தியப்படி நடக்கின்றாரோ எனக் கூறுதல் கூடாத காரியம். ஆனால் ஆறுமுகம் என்ற பெயரை மாற்றி அந்தோனிசாமி என்றும், பழனிவேல் என்பதை மாற்றிச் சாமுவேல் எனவும் வைத்துக் கொண்டால் கிறிஸ்தவன் என எண்ணி மகிழ்கின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்குப்போய் வந்தால் உண்மைக் கிறிஸ்தவன் என எண்ணி மகிழ்கின்றனர். எனினும் தாங்கள் செய்யும் இத்தகைய கண்மூடிப் பழக்கங்கள் யாவும் தங்களைப் போலிகளாக்கிவிட்டன என்பதைத் தெரிந்து கொள்ளாமல் அறியாமையில் அமிழ்ந்து கிடக்கின்றனர்.

ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்குப் போங்கள் என ஏசு சொல்லவில்லை. ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரியுங்கள் என்றுதான் சொன்னார். பரிசுத்தமாகக் கழிக்கும் வகை எது? 'குட்டிக்கூரா' பவுடரை முகத்தில் பூசி, 'லிப்ஸ்டிக்கை' உதட்டில் தடவி, 'பஞ்சவர்ண'ச் சேலை உடுத்திக் கொண்டு பகல் வேஷக்காரர்போல் பகட்டாக, டாம்பீக நடை நடந்து செல்வதும், கோவிலில் 'பிரார்த்தனை' நடக்கும்போது கண்ணைத் திறந்து கொண்டு கள்ளத்தனமாகக் 'கீர்த்தனை' புத்தகத்தையோ, 'பைபிளை'யோ முன்னால் மறைத்துக் கொண்டு சோக்குச் சுந்தரிகள் சொகுசு மைனர்களையும், அக்கம் பக்கத்திலுள்ள அம்மையார் புடவைகளையும் நோட்டம் பார்ப்பதும்தான் ஒழுக்கமா? சாதாரண மனிதர்கள் குடியிருக்கும் நமது வீடுகளிலேயே செருப்பணிந்து கொண்டு வீட்டினுள் செல்வது அசுத்தம் என்று நாம் எண்ணும் போது, ஞாயிற்றுக்கிழமைக்கென்று பிரத்தியேகமாக 'பேட்டா' கம்பெனியிலிருந்து வாங்கிய 'பூட்ஸ்' அணிந்துகொண்டுபோவது தேவனுடைய வீட்டை அசுத்தப்படுத்துவதாகாதா? அவருடைய வீடு நமது வீட்டைக் காட்டிலும் கேவலமாகப் போய்விட்டதா? நாள் முழுவதும் வெளியில் வெறுங்காலோடு ஊர் சுற்றும் மைனர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அதுவும் கோவிலுக்குள் கல்லும் முள்ளும் குத்துகிறதா? வெய்யில் சுடுகிறதா? பின் ஏன் கோவிலுக்குச் செல்வதற்கென்று உயர்தரமான ஆடை ஆபரணங்கள்? 'சூட்' 'கோட்' எதற்காக? இன்னும் சிலர் தொப்பிகூட அணிந்து செல்வதுண்டு. பாவம்! கோவிலுக்குள் வெய்யில் மண்டையைப் பிளக்கிறது போலும்!

கோவிலுக்குப் போகவேண்டுமென்ற முறை எதற்காக ஏற்பட்ட போதிலும் இன்று கோவிலுக்குப் போவது என்பது; சந்தையில் வகை வகையான சாமான்கள் விற்பனை விளம்பரத்திற்காகக் கொண்டுவரப் படுவதுபோல ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் தங்களை விளம்பரம் செய்து மற்றவர் கண்டு தங்களை விரும்பவேண்டும் என்ற உள்ளான ஒரு எண்ணத்தினாலேயாம்.

'ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளுடன் விபசாரம் செய்தாயிற்று' என ஏசுநாதர் சொன்னார் அல்லவா? அப்படியாயின் கோவிலுக்குச் செல்கின்ற ஒவ்வொரு கிறித்தவ ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நேரடியாகவோ மறைமுகமாகவோ இச்சையோடு பார்ப்பதன் மூலம் விபசாரம் செய்தவர்களாகவில்லையா? அல்லது அவ்வாறு இச்சையுடன் பார்ப்பதோ பார்த்தபின் இச்சை உண்டாவதோ இல்லையென எந்த இளம் வாலிபனாவது நெஞ்சில் கைவைத்துச் சொல்ல இயலுமா? கோவிலுக்குச் செல்வதே இத்தகைய தீய பழக்கங்களை மென்மேலும் வளர்க்க ஒரு வாய்ப்பும் சந்தர்ப்பமும் உண்டாக்கிக் கொள்வதற்கே. ஆதலால் இதினின்றும் மீள கோவிலுக்குச் செல்லும் வழக்கத்தை—அதிலும் ஆடம்பரமாக உடுத்துச் செல்வதை நிறுத்துவதாலன்றி வேறு முயற்சிகளால் இயலுமோ? இயலாது. ஏசுநாதர் என்ன சொன்னார்? "நீ நீதிமானாக இருப்பதற்கு உனது கண்களிலொன்று இடைஞ்சலாக இருக்குமாயின் அதைப் பிடுங்கி எறிந்து விடு. இரண்டு கண்களுடனும் நரகவேதனை அனுபவிப்பதைவிட ஒற்றைக் கண்ணனாக இன்ப வாழ்வு வாழ்வதே மேல்" என இயம்பவில்லையா?

என் அருமைக் கிறித்தவர்களே! கோவிலுக்குச் சென்று விபசாரி (விபசாரன்) ஆவதைக் காட்டிலும் வீட்டிலிருந்து கொண்டு நீதிமானாக இருக்கலாமல்லவா? பத்துக் கட்டளைகளை மனப்பாடமாகப்

(தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)

# ஈ. வெ. ரா. மணியம்மை

அல்லது

## E. V. R. MANI AMMAI

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியர் (சட்டப்படி மனைவியார்) மணி அம்மை அவர்களுக்கு இதுவரை K. A. மணி அம்மை என்று இருந்துவந்த பெயரானது பெரியாருக்கும்—மணி அம்மையாருக்கும் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம் பதிவானதிலிருந்து ஈ. வெ. ரா. மணி அம்மை என்று தமிழிலும், E. V. R. மணி அம்மை என்று ஆங்கிலத்திலும் திருத்தமடைகிறது. ஆதலால் மணி அம்மை சம்பந்தமான எல்லா ஆதாரங்களிலும், பிரஸ்தாபங்களிலும் இனி, ஈ. வெ. ரா. மணி அம்மை என்றும் அல்லது E. V. R. மணி அம்மை என்றும் வழங்கிவரும் என்பதாகவும், வழங்கவேண்டும் என்பதாகவும், தெரிவிக்கப்படுவதோடு மற்ற எல்லாத் தோழர்களும், மற்ற எல்லா காரியங்களுக்கும் மணி அம்மையின் பெயர் மேற்கண்டபடியே உச்சரிக்கவும், எழுதவும்பட வேண்டியதாகும் என்பதும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஈ. வெ. ராமசாமி.
E. V. R. மணி.


# குடி அரசு

10—9—49 சனிக்கிழமை.


# வேறு யாருக்கு வேலை?

—(·)—

பஞ்சம்! பஞ்சம்!! பஞ்சம்!!! உணவுக்குப் பஞ்சம், உடைக்குப் பஞ்சம், குடியிருக்க வீட்டுக்குப் பஞ்சம் என்று இந்துஸ்தானம் முழுவதிலும் ஏகக் குரலாயிருப்பதைத் தான் இந்த நாளில் கேட்க முடிகிறது.

இந்தப் பஞ்சங்களைப் போக்க, எப்படி எப்படியோ மண்டைகளை உடைத்துக் கொண்டு தான் பார்க்கிறோம், ஆனால் ஒன்றும் பயனில்லை என்று தான் சேர்ந்து அழுகிறார்கள் இந்துஸ்தான் சர்க்காரும். பஞ்சங்களைப் போக்க—பற்றாக் குறையை ஒழிக்க உருப்படியான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், எல்லாம் வாய் வீராப்போடு முடிந்து விடுகிறது.

நாட்டிலுள்ள பெரும் பான்மையோர், அறிவைப்பெருக்க ஆ[illegible]ரவு இல்லாதவர்களாய்—இருட்[illegible]றையில் உழன்று கொண்டு, பஞ்சங்களுக்கு பலியாகி, எண்ணற்ற நோய்களுக்கும் ஆளாகி, வாழ்வையே ஒரு பெருஞ் சுமையாகக் கருதிக் கொண்டு, என்றைக்கு இந்த உலகத்தை விட்டு, எப்படி ஒழிந்துபோவோம் என்கிற சிந்தனையையே தியானமாகக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தியானம் கலைந்து உலகத்தில் அவர்களை மீண்டும் நடமாடவைக்க—நல்வாழ்வு தழைக்க மார்க்க மில்லாமலில்லை. மார்க்கம் தெரிய வில்லை என்றோ, தெரியப்படுத்த வில்லை என்றோ, எளிதில் தட்டிக்கழித்து விடவும் முடியாது. இந்துஸ்தான் அதிபர்கள் இப்போது முழக்க மிடுவதெல்லாம், பற்றாக்குறை தீர—பஞ்சத்தை ஒழிக்க உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதுதான்.

உற்பத்திப் பெருக்கம் தான் பற்றாக்குறை தீரும் வழி என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். உண்மையும் அதுதான்.

ஆனால் உற்பத்திப் பெருக்கம் எப்படிஆகும்? பெருக்கத்திற்கான வழி துறை என்ன?

சித்திரம் எழுதினால் நன்றாகத் தான் இருக்கும். ஆனால் சுவர் இருக்க வேண்டாமா? என்பது கேள்வியாயிருக்கும் போது, சுவர் இருக்கிறதோ இல்லையோ கவலை இல்லை என்பதாகச் சொல்லிவிட்டு, சித்திரத்தைப் பற்றிப் பேசினால், அந்தப் பேச்சுக்கு எதை ஒப்பிடுவது?

30-பேர் இருக்கும் ஒரு வீட்டில், காலத்தாலும் சந்தர்ப்பத்தாலும் முன்னணிக்கு-தலைமைக்கு-ஆதிக்கத்திற்கு வந்துவிட்ட 2 பேர் தங்களின் சுய தேவையையும் பூர்த்திசெய்து கொண்டு, மேற்கொண்டும் ஆயிரக் கணக்கில் செல்வத்தை முடக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்தக் குடும்பத்தில் எஞ்சிய 28 பேர், ஒரு வேளை யுணவுக்குக் கூட வழியற்றவர்களாய் வாடுகிறார்கள். வாடி வதங்கும் 28-பேருடைய கூக்குரல்-கேள்வி இதுதான்.

குடும்பம் என்றாலே முப்பது பேரும் உறுப்பினர்களாய்ச்சேர்ந்த ஒரு கூட்டுறவுதானே. கூட்டுறவான வாழ்வில் எப்படி 2 பேர் மட்டும் சுய தேவைகளையும் பூர்த்திசெய்து கொண்டு, மேற்கொண்டு முடக்கி வைக்கமுடிந்தது? கூட்டு உறுப்பினர்களை வஞ்சித்த வஞ்சகம்தானே இதற்குக் காரணம்? இல்லாவிட்டால் எங்கள் 28 பேர் வாழ்வும் இப்படியா இருக்க வேண்டும்? ஏதோ ஒருகாலத்தில் ஏமாந்து போனோமென்றாலும் இனி ஏமாற 'மாட்டோம். எங்களை ஏமாற்ற நினைக்கும் எத்தர்களே! இன்னும் எத்தனை நாளைக்கு இந்தத்திமிர் வாதம்?

இப்படி மனங்குமுறிக் கேட்கும், குடும்பத்தின் துணை உறுப்பினர்களை நோக்கி, இது உங்கள் தலைஎழுத்து; அதற்கு யார்என்ன செய்வது? தலைஎழுத்தை மாற்ற ஆண்டவனை சந்தோஷப் படுத்துங்கள்! சந்தோஷப் படுத்தும் வழி அவன் மனம் மாறும் வண்ணம் பிரார்த்திப்பது தான்! என்று வேறு யாரேனும் கூறும் சமாதானத்தைக் கேட்டு எவ்வளவு காலத்திற்குத்தான் 28-பேரும், அதை நியாயம் நியாயம் என்று ஒப்புக் கொள்ளுவார்கள். 28-பேர்களில்

இரண்டொருவருக்காவது சுயசிந்தனையும், ரோஷ உணர்ச்சியும் எப்போதுமே உண்டாகாமலா இருந்து விடும்?

வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்து வஞ்சகர்களின் வஞ்சகத்தன்மையைக்கைவிட்டு விடவேண்டுமென்று வற்புறுத்தும்போது, "வஞ்சகர்களைப் பற்றிக் கவலைபடாதே! நீ உழைப்பது போதாது, மேலும் பாடுபடு!! மூச்சு இருக்கும்வரை முட்டின்றிப் பாடுபடு!!! என்று இதோபதேசம் செய்வதென்றால், உபதேசம் செய்வதற்குச் சுலபமானதே தவிர, செயலுக்கு அது எந்தஅளவு பயன்படக் கூடியதாய் இருக்கும்.

உழைக்கத் தயார்! உயிர் வாழத் தேவையான உழைப்பை, உயிர் போக்கும் அளவுக்குக் கூட மாற்றிக்கடுமையாக உழைக்கத் தயார்! ஆனால் உழைப்பு வஞ்சிக்கப்படாமல் இருக்க—இதுநாள்வரை வஞ்சித்தது போல் இனியும் வஞ்சியாமலிருக்க, வழி என்ன என்பதைத் தெரியப்படுத்த வேண்டாமா என்றுதானே பாடுபட்டும் பலன் பெறாதவன் கேட்பான்.

இப்படிக் கேட்பதை எந்தவகையாலாவது நியாயத் தவறு என்று சொல்லிவிட முடியுமா? ஆனால் இதற்கான விளக்கம், உற்பத்தியைப் பெருக்குங்கள் என்பவர்களிடம் கிடைக்கிறதா?

பணக்காரர்களை உடனடியாக ஒழித்துக் கட்டிவிட வேண்டும், அவர்களுடைய வம்சத்தில் ஒரு புல் பூண்டு கூட இருக்கவிடக் கூடாது என்பது நம் கருத்தல்ல. பணக்காரர் ஆக இருப்பவர்களை இந்தத் தலைமுறைக்குவிட்டு விட்டாலும் படிப்படியாகப் பணக்காரத் தன்மையைக் குறைத்துக் கொண்டுவருவதற்கு, இனியும் புதிதாகப் பணக்காரத்தன்மைக்கு நாட்டில் வழி இல்லை என்று சொல்வதற்கான ஒரு முறையையாவது, உழைப்பைப் பெருக்கச் சொல்லும் உத்தமர்கள் காட்ட வேண்டாமா? என்று தான் கேட்கிறோம். ஏன்? நாட்டில் பற்றாக்குறை தீரவழி, உரிமையுணர்ச்சி எப்போது ஊட்டப்படுகிறதோ அப்போது தான் அது தானாகவே உண்டாகும்.

ஆனால் இந்துஸ்தான் சர்க்காரிடத்தில் இதற்கான பதிலை எப்படிப் பெற முடியும்? ஏழைகள் மேலும் ஏழையாக எத்தனை புது வரிகளைப் போட்டு ஒடுக்கலாம், நாட்டில் பணக்காரர்களை எந்தெந்த வகையால்எல்லாம் சலுகை காட்டி, உற்பத்தி செய்து பெருக்கலாம் என்பதாக வெளிப்படையாகவே சொல்லி மத்தியும் மாகாணமும் போட்டி போட்டுச் செய்யும் ஒரு சர்க்காரின் அமைப்பில், பணக்காரத் தன்மைக்குச் சாவோலை வாசிக்கப்படவே மாட்டாது என்பதை நாம் அறிவோம். என்றாலும் இந்துஸ்தான் சர்க்காரை இன்னமும் ஓரளவுக்கு நம்பிக் கொண்டிருக்கும் பாட்டாளி மக்களுக்காகவே நாம் பரிதாபப்படுகிறோம்.

இந்துஸ்தான் ஆட்சிப்பீடத்தின் உச்சாணிக் கொம்பில், இன்றைக்கு இருப்பவர்கள் நேரு அவர்களும் பட்டேல் அவர்களுமாவார்கள். இந்துஸ்தானத்தின் வலதுகை நேருஎன்றால் பட்டேல் இடதகை என்பதாக எல்லாம் வருணிக்கப்படுகிறது. இந்த வலதுகை இடதுகைகள் தான் உற்பத்திப் பெருக்கு உற்பத்திப் பெருக்கு என்று முழங்குகின்றன.

பற்றாக்குறையைப் போக்க—பஞ்சங்களை ஒழித்துக் கட்ட ஆக்கவேலைகள் எவையோ, அவற்றைச் செய்து ஆக வேண்டிய ஸ்தானத்தில் இருப்பவர்களும் இவர்கள் தான். ஆனால் என்ன செய்கிறார்கள்?

பட்டேல் பிரபு அவர்கள் இப்போதுதான் கோயில் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார். மக்களின் பற்றாக்குறையைப் பற்றி மணிக்கணக்கில் பேசி ஒலமிடும் இந்த உத்தமர்கள் செய்துதீர வேண்டிய வேலை கோயில் திருப்பணிதானா? அதுவும் சாதாரணச் செலவில் சாதாரணத் திருப்பணியல்லவாம். சோமநாதர் கோயிலைப் புதுப்பிப்பதற்காகக் கோடிக்கணக்கில் நிதி திரட்டுவதாம்! இப்போதே 34 லட்சம் சேர்ந்துவிட்டதாம். இந்த நிதி டிரஸ்டிகள் ஏழுபேரில் இந்துஸ்தான் சர்க்காரின் தொழில் நுணுக்க நிபுணர்கள் மூன்று பேராம். கோவிலில் பிரதிஷ்டை செய்யப் போகும் ஆவுடையாரை (லிங்கத்தை) புது லிங்கமாய், கருப்பு சலவைக் கல்லால் ஆக்கப் போகிறார்களாம். எப்படியிருக்கிறது இந்தத் திருப்பணி?

இப்போதே ஏராளமான செல்வங்கள், மக்கள் மத்தியில்நடமாடாமல் கோவிலில் சுருண்டு தூங்குகின்றன. இவற்றைத் தட்டி எழுப்பி நடமாடச் செய்தாலாவது, மக்களின் பஞ்சங்களைத் தீர்க்க வழியுண்டு என்று எடுத்துக் காட்டப்படுகிறது. மக்களின் அறியாமையால் குவித்து வைக்கப் பட்டிருக்கும் இந்த உழைப்புக் குவியல்கள், நாட்டில் பெருக்கெடுத்து ஓடுமாயின், மக்கள் வாழ்விலேயே மறுமலர்ச்சி உண்டாகி விடும் என்பதை அவர்களும் அறியாதவர்களல்ல. இருந்தும் கூட இந்துஸ்தானத்தின் தொழில் நிபுணர்கள் (!) உட்பட இந்துஸ்தானத்தின் இடதுகையான பட்டேல் பிரபு அவர்களும் சேர்ந்து இந்தத் திருப்பணி நடத்தப்படுகிறது என்றால், இந்த வயிற்றெரிச்சலுக்கு யாரை நோவது?

வலது கையான நேரு அவர்கள், பணக்காரத் தன்மையை நாட்டில் பராமரித்து வளர்க்கப் போகிறேன் என்றால், பணக்காரத் தன்மைக்கு அஸ்திவாரமான மதத்தன்மையை வெளுன்றச் செய்யப்போகிறேன் என்கிறார் இடதுகையான பட்டேல் அவர்கள்.

அடிப்பவனுக்குத் தடி! திருடுபவனுக்குக் கன்னக்கோல்! தூக்கிக் கொடுப்பதைப் போலப் பணக்காரனுக்குக் கைக்கருவியாகக் கோயில் என்கிறார் உதவிப் பிரதமர்.

பாட்டாளிகள் பகுத்தறிவைப் பெறாத வரையில் இப்போப்பட்ட பிரதமர்கள் உதவிப் பிரதமர்களைத் தவிர, வேறு யாருக்குத் தான் நாட்டில் வேலை?

(7ம் பக்கத்தொடர்ச்சி)

படித்து வந்து சொல்லவேண்டுமென ஏசுநாதர் சொன்னாரா அல்லது அதன்படி நடக்கவேண்டுமென்றா? நீங்கள் அவ்வாறு நடக்கிறீர்களா? பாவ மன்னிப்பு உண்டென்று நம்புகிறீர்களா? அப்படியானால் எல்லாரும் தன் தன் விருப்பப்படி எதையும் செய்யலாமே. இதற்காக கோவில் எதற்கு? குருமாருடைய உபதேசம்எதற்கு? பாவத்திற்கு ஒருக்காலும் மன்னிப்புக் கிடையாது குற்றவாளி தண்டிக்கப்படவேண்டும் —தண்டிக்கப்படுவான். அதுதான் நீதி. "வினை விதைக்கிறவன் வினை அறுப்பான். தினை விதைக்கிறவன் தினை

அறுப்பான் என வாசிக்கவில்லையா? அப்படியிருக்க, உங்களுக்குப் பாவ மன்னிப்புக் கொடுக்க இந்த கோவில் குருமார்கள் யார்? சட்டத்தை மீறுகிறவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமல்லவா? கடவுளின் கட்டளைகளில் முக்கியமானதும், முதலாவதுமாகிய விக்கிரக ஆராதனை கூடாது என்ற கட்டளையை மீறி மனமறிந்து பாவம் செய்கிறீர்களே, நீங்கள் உண்மைக் கிறிஸ்தவர்களா? போலி என்று நான் சொன்னதிற் குற்றமுண்டோ?

நியாயத் தீர்ப்பு நாளிலே உங்களை நோக்கி, "அக்கிரமக்காரரே, நான் பசியாக இருந்தேன் புசிக்க ஒன்றும் கொடுக்கவில்லை, வியாதியாக இருந்தேன் என்னை விசாரிக்கவில்லை, அநாதையாக இருந்த போது நீங்கள் என்னை ஆதரிக்கவில்லை. அதாவது பூலோகத்தில் ஏழையாகவும், பாமரராகவுமுள்ள உங்கள் உடன் பிறந்த மக்களுக்கு நீங்கள் எதைச் செய்யவில்லையோ அவைகளைத்தான் குறிப்பிடுகிறேன்'' எனக் கூறுவாரே அப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்? ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்குச் செல்லுங்கால் காணிக்கை செலுத்துவதற்கெனக் கணக்காக காலணாக் கொண்டு சென்று காசுப் பெட்டியில் 'கண்ணிய'மாகப் போட்டுவிட்டு வெளியில் வரும்போது வழியில் உங்களிடம் காலணாப் பிச்சை கேட்கும் கபோதிகளையும், வயோதிகர்களையும் கண்ணெடுத்தும் பாராமல் வரும் கனவான்களே, நீங்கள் போட்ட காணிக்கை கடவுளிடம் போய்ச்சேருவதாக மனப்பால் குடிக்கின்றீரா? அல்லது பசியால் வாடும் பரதேசிகளையும் ஆதரிப்பாரற்ற அனாதைகளையும், கண்டும் கவனியாமல் விட்ட குற்றத்திற்காக நீங்கள் அடையப் போகும் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஆண்டவனுக்கு அளிக்கும் லஞ்சமா?

வெளிவேடம் தரித்து வீண் காலம் கழிக்கும் போலிக் கிறித்தவர்களே இன்றே மனந்திரும்புங்கள். இன்றேல் ஏமாறுவது திண்ணம். நீங்கள் நம்பும் நியாயத் தீர்ப்பு நாள் உண்டெனினும் அதில் ஏமாறுவது நீங்களே, நீங்கள் சொல்லுகிறபடியே—நம்புகிறபடியே இரண்டாம் முறையாக ஏசுநாதர் வருவார். கட்டாயம் வருவார். வந்து கொண்டுதான் இருக்கிறார். ஆனால் அவர் மனித ரூபத்தில் வருவாரென எதிர்பார்க்கவேண்டாம். 'பகுத்தறிவு' என்னும் ரூபத்தில் தோன்றி 'புரட்சி' என்னும் பிரளயத்தால் உங்களைப் பொசுக்கிப் போடுவார். ஏமாந்து போகாதீர்.

—T. சாமுவேல்ராஜ்.

தளபதிக்கு

# தம்பியின் அஞ்சல்!

★

தம்பி எழுதுகிறானே தறுதலைகள் பேச்சில் மயங்கி ஏன் என்று பார்க்கிறீரா? ஏ அண்ணா! உம்மையே நம்பிப் பின்பற்றிய எங்களை, தரணி காட்டிக் கொடுத்தாலும் தளபதி காட்டிக்கொடுக்க மாட்டார் என்று நம்பிக்கிடந்த எங்களை மோசஞ் செய்யலாமா? எவருடைய தியாகத்தினால், உழைப்பினால் எங்கள் இயக்கம் வளர்ந்ததோ, அவருக்கா அண்ணா நீர் துரோகம் செய்வது? அவர் செய்துள்ள தியாகங்கள் உமக்குத் தெரியாதா? எவ்வளவு நிதிக்கொள்கைகளைக் கொடுத்திருப்பார்! என்றும் அறியாதிருந்த எம் இனத்தை ஈடேற்றினார் தியாகி! அவருக்கும் அவர் தியாகத்திற்கும் எப்படி நீர் துரோகம் புரிந்தீர்? அதற்கு உம் மனம் எப்படி இடங்கொடுத்தது?

அண்ணா! இதோ பாரீர்! எங்களை, தொண்டர்களைப் பாரீர்! நம்பி நம்பி நட்டாற்றில் விடப்பட்ட வீரர்களைப்பாரீர்! நீரன்றி வேறு தளபதி இல்லை என்று நம்பி மோசம் போன ஊழியர்களைப்பாரீர். நாங்கள் என்ன செய்தோம் உமக்குக் கேடு? ஆறறிவு கொண்ட அறிஞர் அண்ணா என்று அன்புடன் அழைத்தோமே! ஓரறிவுடன் சிந்தித்திருக்கலாகாதா பெரியாரின் மணவினையை? உம்மை நம்பிக்கையுடன் பின் பற்றினால் திராவிடப் போரில் வெற்றி கிடைக்கும் என்று சொன்னார்களே! நாங்கள் கடைபிடித்துக் கண்ட வெற்றி என்ன? எவர் எம் கண்களைத் திறந்தாரோ அவ்வுத்தமரைத் துரோகியாக்கினீர் நீர்!

எங்கள் பணம் பாழாக உமது சொற்பொழிவு எங்கு நடப்பினும் கேட்க வந்தோமே! எங்கள் தொண்டை கிழிய உம்மை வாழ்த்தினோமே! அறிஞரே! அண்ணாவே தளபதியே! திராவிடத்தின் சிற்பியே! எழுத்தின் செல்வமே! சர்வாதிகாரியே! என்றெல்லாம் வாழ்த்தினோமே! சோர்வின்றி நெஞ்சொடிய உம் பாதையை பின்பற்றினோம். மக்கள் பாதையில் கண்ட படுகுழியை நிரப்பினோம். சுக போக வாழ்வை வெறுத்தோம். தூங்கினோமில்லை. நாங்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தையெல்லாம் எங்கள் சுகபோக வாழ்விற்கா செலவிட்டோம்? உமது கருத்துரைகளுக்கும் சொற்பொழிவுகளுக்குமல்லவா செலவழித்தோம். எங்கள் வீட்டை உமது பொன்மொழிகளால் நிரப்பினோம். மாநாடு சுற்றினோம். எங்கள் உழைப்பில் என்ன தவறு கண்டீர் சொல்லும்!

பெரியார் கண்ட திராவிடத்திற்கு நீர் தளபதிதானே? ஏன் உமக்குத் துரோக நினைவு? ஒன்றுமறியா பலகோடி மக்களைப் பாயவிட்டு ஒரு சிலருடன் சேர்ந்து கும்மாளமடிக்கிறீர்! ஒரு திட்டமுமறியா மக்களை களிமண்ணாக்கி தியாகம், உழைப்பு பகுத்தறிவு பாசறையிலே உழன்ற வீரரை வீழ்த்த முற்பட்டீர்.

கோல்! உமக்கு எழுதுகோல்! மக்களைக் களிமண்ணாக்கிய கொடுங்கோல். ஏமாளியின் இரத்தம், எழுதுகோல் சிந்திய மை. ஏழையின் இயல்பு. எங்களைப் போன்ற தொண்டர்களை ஏமாற்றி வாழ்வை வதைத்த பரம சத்துருக்கள்.

இதோபாரீர்! ஏமாளியின் விழிப்புச் சொல்! உம் மையிலே மயங்கிய கண்டனங்களை! திராவிடனின் கண்ணீர்த் துளிகள்! தொண்டர்களே! நீங்களா இப்படி மாறுவது? என்று கேட்கிறீரா? கேளும் தைரியமிருந்தால்! இருதய சுத்தியோடு பதில் சொல்லுகிறோம், நீர் எழுதியது (3-7-49 தி. நாட்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த அம்மாளே, எனக்குப் பெரியாரைத் திருமணம் செய்து கொள்ளக் கொஞ்சம்கூடப் பிரியமில்லை. அவரே என்னைப் பலாத்காரம் செய்கிறார்—என் திருமணத்தைத் தடுத்து என்னை மீட்டுக்கொண்டு போங்கள் என்று உங்கள் அண்ணாவுக்குத் தபால் எழுதினாரா? அப்படித்தான் பெரியார் திருமணம் என்றுகேள்விப்பட்டாரே உங்கள் அண்ணா, அவர்

---

டிலே) நியாயமா? உமக்குப் பொருந்தா மணம் என்றாலே புரியாதா? பகுத்தறிவுக்கும் உமக்கும் பலநாள் பகையா? திராவிடத் தளபதி என்ற பட்டம்உமக்குத் தகுமா? பெரியாரின் பாதையை ஏன் பின்பற்றினீர்? பின்பற்றிய பிறகு ஏன் அவ்வரை மோசஞ் செய்தீர்? பெரியாரின் சரக்கினால் உயர்ந்தவன், அவருக்குத் துரோகம் செய்தால், "என் சரக்கினால் உயர்ந்தாயே! நான் உனக்கு உயர்ந்த சரக்கு அளித்ததற்கு நீ செய்த கைமாறு என்ன? உனக்கு நாணயம் இல்லையா? நெஞ்சிலே வஞ்சகம் ஏன் கலந்தது?" என்று கேட்பாரல்லவா? அதே போல் நான் உம்மை அதே கேள்வியைக் கேட்கிறேன். நீர் செய்தது நியாயமா? சொல்லும்! எங்கே என் கேள்விக்குப் பதில்?

ஏ! அண்ணா! தொண்டர்களின் எழுதுகோல் ஓர் நீரூற்று. அதிலிருந்து கிளம்பும் கேள்வித் துளிகளைப் பாரீர்! பாரீர்! கண்டனத் துளிகளை!

எங்கள் சுயபுத்தியை உம் எழுத்தோவியத்தினால் இழந்தோம். பைத்தியக்காரத்தனம். உண்மை நம்பிக்கையோடு கடைப்பிடித்து உண்மை உழைப்புடன் பின்பற்றினால் திராவிடநாடு கிடைக்கும் என்று சொன்னார்கள். பைத்தியக்காரத்தனம். திராவிட கழகத்தலைமைப் பதவியின் மகுடம் தமக்கு சூட்டப்படும் என்று ஒரு சிலர் நினைத்து ஏங்குகிறார்கள். அதுவும் பைத்தியக்காரத்தனம். ஆனால்............எங்கள் போதை தெளிந்தது.

கண்ணீர்த் துளியில் கையெழுத்
திட்ட துத்திக்குளம்
—A. மாணிக்கம்

பெரியாரை அணுகி அவருடைய தவறுதலை எடுத்துரைத்தாரா...?

தி. தோழன்:- போடா போ, எவ்வளவோ பேர் போய், இது தகாது, இதை நிறுத்தி விடுங்கள் என்று கதறினார்களாம். இது என் சொந்த விஷயம் இதில் நீங்கள் தலையிடவேண்டாம் என்று அடித்தவாய் துடைத்தாற்போல் சொன்னாராம்.

கா. தோழன்:- எவ்வளவு பேர் போனார்கள்? பெரியாரிடம்படையெடுத்தவர்கள் அட்டவணையை வரிசைக் கிரமமாக எழுதியிருந்தார். ஆனால் தான் போகவில்லை பெரியாரைப் பார்க்க. அவரிடம் போய் அவரின் திருமணத்தைத் தடுக்கப்பார்க்கவில்லை. காரணம் என்ன? இதுபொருந்தும்திருமணம் தான். அவர்செய்வதுஞாயம்தான். அவருக்கும் இந்நாட்டு வயது நெருங்கிக் கொண்டிருக்கிறது—கழகத்திற்கும், கழகப்பணத்திற்கும் உழைத்துக் காப்பாற்றக்கூடிய தன்னலமற்ற தியாகியைப் பொறுக்கி எடுத்தது அண்ணாதுரைக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சியாத்தான் இருந்திருக்கும். ஆனாலும், அவர் திருமண நாளை வாய்ப்பாகக் கொண்டு பகைமையைக் காண்பிக்க முற்பட்டு விட்டார். இயக்கத்திற்குப் பிரதம செயலாளர்; பெரியாரின் பிரதிபிம்பம், இயக்கத்தின் அண்ணா, இயக்கத்திற்கு இருதயம் போன்றவர் பெரியார் திருமணத் தடுப்பு முன்னணியில் சேராத காரணம் என்னடா?

தி. தோழன்:- எல்லோரையும் போல தன்னையும் தலைவர் அவமானப்படுத்தி விடுவாரோவென்று பயந்திருக்கலாம் அதற்காக நீ......

கா. தோழன்:- பயமல்லடா, வெட்கம். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது அவரைக் காண. திரைப்படத்திலேஉருவாக்கினாரே படலங்களை. அவைகளை நாட்டிலே நடித்துக் காண்பிக்கிறார். முன்சொன்னாயே ராஜதந்திரம்னு—அது தாண்டா அடுத்துக் கெடுக்கும் படலம். இன்றுதான் அது கைகூடிற்று. பணம் பறிக்கும் படலம் தோழர்களுக்கு வெற்றி கொடுக்கவில்லை. அவர்தான் எப்போதுமே, இயக்கத்திலிருந்து ஒரு பைசா கேட்பவனை என் வேலைக்காரனாக மதிப்பேன். இயக்கத்திற்கு ஒரு காசுகொடுப்பவனை என் எஜமானனாக மதிப்பேன் என்று சொல்பவராச்சே. அதைபறியாலே நெடுஞ்செழியன் தம்பி அவர்கள் இயக்கப்பணத்தைச் சொந்தப்பணமாகப் பாவிக்கிறார். 'இயக்க வேலைகளுக்கும் கொடுக்கவில்லை; நினைவுச் சின்னம் நாட்ட நாடகம் ஆடி நாங்கள் தான் கொடுத்தோம்' என்று ஒரு நாள் மாலைமணியில் மனம்கலங்கி எழுதியிருக்கிறாரே. பார்த்தாயா? இப்போதுமானம் பறிக்கும் படலத்தில் இறங்கியிருக்கிறார்கள்; பெரியாரை அவதூறு பேசிக் கொண்டு.

கா. தோழன்:-அத்துடன் பெரியாரை மட்டும் தூஷிக்கிறாரா? ஊர் பெயர் தெரியாத தன்னை நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்த விடுதலை பத்திரிகையையே விளக்கம் கேட்கிறார், கிண்டல் செய்கிறார், உங்கள் அண்ணா. தீட்டிய மரத்தில் கூர்மை பார்ப்பது சகஜம் போலிருக்கிறது.

தி தோழன்:-ஏண்டா, இதிலே எனக்கு ஒரு சந்தேகம். எங்கள் அண்ணா மட்டும் பெரியார் போக்கைக் கண்டிக்கவில்லையே. மற்ற பத்திரிகைக்காரர்களும்.........

கா. தோழன்:-காட்டுமிராண்டித்தனமாக கட்டுப்பாடற்றவர்கள் பத்திரிகைதானே. விற்பனைக்கு காத்து அழுது கொண்டிருந்தவர்கள் இந்த வாய்ப்பினைக் கொண்டு நல்ல விற்பனை செய்து கொள்கிறார்கள். ஒன்று சொல்கிறேன். நம்ம போர்வாள் ஆசிரியர் மா. இளஞ்செழியன் நடிகவேள் ராதாவை, குறிப்பிட்டு "இயக்க பிரபலராக அவரைக் கருதமுடியாது. அவரை அனுதாபியாகவோ, அல்லது ஆதரவாளராகவோதான் கருத முடியும்" என்று கீழ்வெட்டாக எழுதியிருக்கிறார். காரணம் பெரியாரைப் பற்றி திருச்சி மகாநாட்டிலே நல்லவிதமாகப் பேசியதால். ஆனால் அவருக்கு, முதலில், அனுதாபியாகவும், ஆதரவாளராகவும் பின்புதான் முக்கியஸ்தராகவும் வரமுடியும் என்பது தெரியாது போலிருக்கிறது. ஆனால் ஒன்னுடா, போர்வாள் படித்துத் திருந்தியவர்களைவிட ராதா நாடகம் பார்த்துத் திருந்தியவர்கள் மடங்கு அதிகமாகத்தான் இருக்கும்.

தி. தோழன்:-டேய் நீ சொல்வதெல்லாம் இப்போதுதான்

எனக்கு நன்றாய் விளங்குகிறது. என்ன இருந்தாலும் நம்ம அண்ணாதுரை செய்தது சரியில்லை தான். மாலைமணி மட்டும் படிப்பதில் விபரம் தெரிந்து கொள்ளவே முடியாது.

கா. தோழன்:-அவர் மாலைமணி ஆரம்பித்தது இயக்கத்தின் நன்மைக்கென்றுதான் ஆரம்பித்திருந்தால் யாவரும் வரவேற்க வேண்டியதுதான். அப்படியில்லாமல் மானம் பறிக்கும் படலத்தில் பெரியாரை நிறுத்தி, வசைகளைப் பொழிய நினைக்குமாயின் மாலைமணி மறையத்தான் நேரிடும். அதற்குப் பின்னால் ஒரு சில கண்டன ஏடுகளைக் கொண்டு மற்றப் பத்திரிகைகளும் ஒன்றன் பின் ஒன்றாக மறையும். பெரியார் திருமணம் திராவிட மக்களுக்கு ஒரு எச்சரிக்கையும் கூட. அதாவது அவருக்குப் பின்னால் திராவிடநாடு பிரிக்கப்பட்டாலும் "இப்படி ஒதுங்கி ஓரமாக நிற்கிறோம். ஓரமாக படுத்துக்கொள்கிறோம்" என்று சொல்பவர்கள் மீது மக்கள் கண்ணோட்டம் இருக்கவேண்டும் என்பது தான். தளபதிகள் தன்னலமற்றவர்கள் என்று நினைக்கும் மக்கள், நாட்டின் கவனிப்பு இல்லாவிட்டால், மேற்படி ஆசாமிகள் திராவிட நாட்டிலிருந்து, தன்தன் நகரத்தை தனித் தொகுதியாக பிரித்துக் கொடுக்கும்படி கேட்டாலும் கேட்பார்கள் அசகாயசூரர்கள்.

தி. தோழன்:-ஆமாண்டா எங்கள் கட்சியைப்பற்றி இவ்வளவு நன்றாகத் தெரிந்தும் பேசுகிறாயே, இந்த கதர் உடைகளை கழற்றி எறிந்துவிட்டு என்னைப் போல கருப்பு உடை அணிந்து எங்கள் கட்சியில் சேர்ந்து கொள்வது தானே?

கா. தோழன்:-நானும் ஒரு காரியமாகத்தான் இதைப் போட்டுக் கொண்டிருக்கிறேன். நம்மபிரதமர் ராஜாயிருக்காரே, அவருடைய காலத்திலேயே அரசாங்கத்திற்கு ஒரு வேலைக்கு ஒரு அப்ளிகேஷன் போடலாமென இருக்கிறேன். அது வரைக்கும் கதரே போட்டுண்டு காங்கிரஸை வாழ்த்தபோகிறேன்.

எல். ஜி. சண்முகானந்தன்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சத்தைப்பற்றி நாம் பூரணமாக அறியவில்லையென்று நீ கூறுகிறாயா?

விடை:- ஆம். கடிகாரத்தின் அமைப்பை நமக்குத் தெளிவாக விளக்கிக் கூறமுடியும். பிரபஞ்ச அமைப்பைத் தெளிவாக விளக்கிக் கூறமுடியாது.

வினா:- இந்த வாதத்தைப் பற்றி வேறு ஏதாவது சொல்ல வேண்டியதுண்டா?

விடை:- கடிகாரத்தைப் பார்த்தவுடன் அதை உண்டுபண்ணியவன் ஒருவன் இருக்க வேண்டுமென்று அறியலாமேயன்றி கடிகார உற்பத்திக்குக் காரணமான பொருள்களையுண்டு பண்ணியவன் ஒருவன் இருக்கவேண்டுமென்றும் சொல்லமுடியாது.

வினா:- வேறு என்ன?

விடை:- உலகத்தை உண்டுபண்ணியவன் ஒருவன் உண்டென்று ஒப்புக்கொண்டாலும் உலகத்தை சிருஷ்டித்தவன் ஒருவன் இருப்பதாக நமக்கு ருசுப்படுத்த முடியாது.

வினா:- இம்மாதிரியான சங்கடங்கள் பல இருப்பதினால் பிரஸ்தாப விஷயத்தில் நாம் கைக்கொள்ளவேண்டிய நிலை என்ன?

விடை:- நாம் அந்தரங்க சுத்தியோடு ஆராயவேண்டும். பிடிவாதமாக எதையும் நம்பக்கூடாது. திறந்த மனத்தோடு உண்மையை அறியமுயல வேண்டும்!

வினா:- கடவுள் என்ற பெயரை நாம் எந்தப் பொருளில் வழங்கவேண்டும்?

விடை:- ஜீவகோடிகளின் உயர்ந்த லக்ஷ்யத்தைக்குறிக்கும் பொருளாகவே நாம் வழங்கவேண்டும்.

வினா:- அப்படியானால் சிலரின் தெய்வங்கள் உத்தமமானவை என்றும் சிலரின் தெய்வங்கள் மோசமானவை யென்றும் ஏற்படாதா?

விடை:- ஆம். நிச்சயமாக ஏற்படும். ஒவ்வொரு மனிதனும் அவனவன் லக்ஷ்யத்துக்கும் கடவுளுக்கும் அளவு கோலாக இருக்கிறான்.

வினா:- நமது கண் பார்வை எட்டும் அளவுக்கே நமக்குப் பார்க்கமுடியும். அதுபோல நமது மனோ சக்திக்கு இயன்ற அளவிலே நமக்கு சிந்திக்கவும் விரும்பவும் முடியும்.

வினா:- அப்படியானால் கடவுளை சிருஷ்டித்தது யார்?

விடை:- ஒவ்வொருவனும் தன் கடவுளை சிருஷ்டித்துக் கொண்டான்.

## சுடர்மணிகள்.

-(●)-

(தீரட்டியது வீரராசன்)

நல்வினையின் மேன்மையைக் கருதியே நல்வினையைச் செய்ய வேண்டுமேயன்றி அதனால் ஏற்படும் லாப நஷ்டங்களைக் கருதக் கூடாது.

—அக்பர்

சங்கீதமும் சிரிப்பும் உணர்ச்சியின் வளர்ச்சிக்குரிய சிறந்த அப்பியாசங்களாகும். சிரிப்பு மனச்சோர்வை ஓட்டுகின்றது. மனச்சோர்வுள்ளவன் எந்தத் துறையிலும் வெற்றியடையமாட்டான்.

—டக்ளஸ்பேர்பாங்ஸ்

பற்றற்றிரு ஆனால் காட்டிற்கு ஓடிவிடாதே.

—பெ. வி.

நீ இப்பொழுது சாப்பிடுவதில் பாதி சாப்பிடு. இரண்டு மடங்கு தூங்கு, மூன்று தரம் நீர் அருந்து, நான்குதடவை சிரி. இப்படிச் செய்தால் நீ வெகுகாலம் வாழலாம் வாழ்வாய்.

—ஜான் ஹார்விஹெல்லாக்

நான் மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறேன். உலகத்தில் காரியங்களை நடத்திக் காட்டும் சிலர். நடக்கும் காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் பலர். என்ன நடக்கிறதென்றே அறியாமலிருக்கும் பலர்.

—பட்லர்

அன்பாயிரு அடிமையாயிராதே

—பெ. வி.

தான் நேரில் பார்க்கிற உடன் பிறந்தானிடம் அன்பும் ஆசையும் இல்லாமலிருக்கிற ஒருவனா நமது கண்ணுக்குத் தெரியாத மறைந்துள்ள ஆண்டவனிடம் அன்பு செலுத்தப் போகிறான்.

—தீரக்கோமான்

உலகத்தின் நீர் வீழ்ச்சிகளில் அதிக சக்திபெற்றது ஸ்திரீகளின் கண்ணிலிருந்து வருகிறதே அது தான்.

—வில்ஸன்மின்னர்

யோசிக்காமல் ஒன்றும் பேசாதே.

படித்துப்பாராமல் ஒன்றிலும் கையெழுத்திடாதே.

பார்க்காமல் ஒன்றையும் பருகாதே.

—ஒரு அனுபவசாலி

(4ம் பக்கத்தொடர்ச்சி)

கோயில், (மத) குரு, (போப்பு) கட்சி, மன்னன் ஆகிய இவைகள் ஆணைக்குக் கட்டுப்பட்டு, உங்கள் சிந்தனையை நீக்கிவிடுவீர்களாயின், கேவல நடு நிலைபாளராகவோ, அன்றி அடிமைகளாகவோதான் மாறமுடியும்.

ஒவ்வொரு மனிதனும் சிந்திப்பதும்—ஆராய்ந்து கண்டுபிடிப்பதும்; ஒவ்வொரு மனிதனுடைய உரிமைமட்டுமல்ல, கடமையுமாகும்; எவனொருவன் இதைப் பலவந்தத்தினாலோ, அன்றி பயத்தினாலோ தடுக்க முயல்கிறானோ அவன் தன் துணை மக்களைத் தாழ்த்தவும், அடிமைப்படுத்தவும் உதவுபவனாவன்.

அவன் உள்ளத்தின் நேர்மையான—சிறந்த உண்மையை விலை மதிக்கவியலா மாணிக்கமெனப் போற்றிப் பத்திரப்படுத்தல் வேண்டும்.

அவன் தனக்களிக்கப்பட்ட எல்லாக் கேள்விகளையும் பொறாமை-பொறாமையினால் அவமதிப்பது, வெறுப்பு, விருப்பு—ஆசை, அச்சமின்றிச் சோதித்தல் வேண்டும். அவன் குறிக்கோள்—ஒரே குறிக்கோள் உண்மையைக் கண்டுபிடித்தலிலேயே இருத்தல் வேண்டும். அவன் சிந்தனைக்கு செவி மடுப்பின், உண்மை அபாயமானதல்ல, அப்படி நினைப்பது தவறு என்பது தெரியும். அவன் ஆதாரங்களையும், வாதங்களையும் நேர்மையான—நீதியான துலாக்கோலில் நிறை பார்க்க வேண்டும்; துலாக்கோல் எவ்வித ஆசைக்கோ அன்றி, தேவைக்கோ மாறுவனவாக இருத்தல் கூடாது. அவன் எவ்வித ஆதாரத்திற்கோ—எவ்விதப் பெயருக்கோ, கொள்கை—கோட்பாட்டிற்கோ—எதற்கும் கவலை கொள்ளக்கூடாது; தன் சிந்தனை இவைகளை உண்மை என்று கூறாதவரையில்.

அவன் உலகிற்கு அவனே உரிமையாளனாகவும், அவன் உள்ளமே மணிமுடி தரிக்கவும் வேண்டும். பலவந்தத்தின், பயத்தின் விருந்தினர்களை அவன் உரிமை உலகினின்றும் ஒழித்துக்கட்ட வேண்டும்.

பொறாமை, தன்னலம், வெறுப்பு, ஆணவம், அலட்சியம் இவைகள் உண்மைக்கும், முன்னேற்றத்திற்கும் எதிரிகள்.

உண்மையான 'உண்மை' ஆராய்ச்சியாளன், பழமை என்பதற்காகப் பழமையைக் கொள்ளவோ, அன்றி புதுமை என்பதற்காகப் புதுமையைத் தள்ளவோ மாட்டான். அவன் மடிந்தோன் என்பதற்காக மனிதனை நம்பவோ அன்றி வாழ்வோன் என்பதற்காக மறுக்கவோ மாட்டான். அவன் வரையில் அவன் உரை ஒவ்வொன்றும் உண்மையுடையதும், அதில் பொதிந்துள்ள சிந்தனை, உரையாளனுடைய கருத்துக்கு ஒரு சிறிதும் மாறுபாடற்றதாகும். அவன் ஒரு அரசனாகவோ அன்றி ஆண்டியாகவோ -தத்துவவாதியாகவோ அன்றி தொழிலாளியாகவோ இருக்கலாம்—ஆனால் சொல் ஒவ்வொன்றும், உண்மை அல்லது சிந்தனையில் இலாபமோ அன்றி நட்டமோ எய்துவதில்லை. அதன் தன்மை—அதை உலகிற்குக் கொடுத்த மனிதனின் புகழையோ அன்றி நாட்டினையோ பொருத்ததல்ல—தன்னந்தனிமையானது.

பொய்மைக்குத்தான் புகழும், இடமும், புறத்தோற்றமும், புனிதமும், (போப்பின்) குரு முடியும், மணி முடியும் உதவி கொடுத்தாக வேண்டும்.

அறிஞரும், உண்மை நேர்மையாளரும், ஆணைக்கோ அன்றி எண்ணிற்கோ—பெருவாரி என்பதற்கோ கட்டுப்பட்டவர்களல்ல.

அவர்கள் எதை உண்மை என்று நம்புகின்றனரோ அதை ஒப்புக் கொள்கின்றனர். அவர்கள் உண்மையைத் திருப்திப்படுத்தும் வரை, பெரியோர்களின் கருத்தென்பதற்காகவோ, கொள்கை, வெளியீடு, விரிவுரை என்பதற்காகவோ கவலை கொள்வதில்லை.

அவர்கள் எத்திசையிலும் உண்மைக்காக நாடி, ஓடி, கிடைத்த போது மகிழ்ச்சியோடு-முன்னோர் கருத்து என்பதற்குப் பதில்—பொறாமை, வெறுப்புகட்குப் பதில்—மகிழ்ச்சியோடு ஒப்புக் கொள்கின்றனர்.

இம்முறை பணியைதான், அறிஞரும், நேர்மையாளரும் கைக் கொள்ள முடியும்; மற்ற முறைகள் அவர்களால் கைக்கொள்ள முடிவதில்லை.

வெவ்வேறு தொழிற்பகுதியைச் சேர்ந்தவர்களும், உண்மையை—மெய்ப்பொருளை நாடுவதிலேயே கருத்துக் கொண்டுள்ளனர். அரசியற்பணி மேற்கொண்டோன் உலக வரலாற்றைப் படித்து, பல நாடுகளின் குறிப்பெடுத்து, தன் நாட்டில் இறந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகள் மறுபடியும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள முயல்கின்றான். சில ஆராய்ச்சியாளன் குன்றுகளை மெல்லக் குடைந்து சென்று, மலைகளில் ஏறி, எரிமலையின் வாயைக்கண்டு, தீவுகளைக் கடந்து—கண்டங்களைக் கடந்து, உலக வரலாற்றை ஒரு சிறிதாகினும் அறிய முயல்கின்றான். அவனுக்கு வேண்டுவது எல்லாம் உண்மை ஒன்றே.

உலோக ஆராய்ச்சியாளன் தன் உருக்குப் பானையை வைத்துக் கொண்டு எண்ணற்ற சோதனைகள் செய்து, விடைகள் கண்டு, பொருட்களின் தன்மையை கண்டு, இயற்கை என்ன தயாரித்துக் கொடுத்துள்ளது என்பதைவெளிப் படுத்த முயல்கின்றான்.

பொறிவல்லுனர் பொறியிலுள்ள உண்மைகளை உணர்ந்து வெளிப்படுத்த முயல்கின்றனர். அவர்கள் இயற்கை முறையிலேயே இயற்கை வலிமையைக் கைப்பற்றி பயன்படுத்த முயல்கின்றனர். அவர்களுக்கு வேண்டுவது உண்மை—மெய்ப்பொருள்.

மருத்துவர்களும், உடல் கீண்டி நலப்படுத்தும் மருத்துவர்களும் (இரணவைத்தியர்கள்) நுணுகி நோக்குதலிலும், சோதித்தலிலும், சிந்தனையிலும் நம்பிக்கையுடையவர்களாவர். அவர்கள் மனித உடல், தசை, குருதி, குருதிக் குழாய் (நரம்பு) இவைகளைப்பற்றியும்,—மூளையின் அதிசயத்தையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர்களாவர். அவர்களுக்கு வேண்டுவதெல்லாம உண்மையைத் தவிர வேறில்லை.

அம்மாதிரியே விஞ்ஞான மாணவன் ஒவ்வொருவனிடமும் காணலாம். அவர்கள், ஒவ்வொரு கையாளும் உண்மையைக் காண முயன்று, மிக்க தேவையானவைகளை அவர்கள் கண்ட உண்மைகளை உலகிற்குக்கொடுக்கின்றனர்.

அவர்கள் வீரம், அவர்கள் அறிவிற்கு சமனாக இருத்தல் வேண்டும். இறந்தோர் என்ன கூறி இருப்பினும் சரி, அல்லது வாழ்வோர் என்ன நம்பியிருப்பினும்

சரி, அவர்கள் அறிந்ததை அறிவித்தேயாக வேண்டும். அவர்கட்கு அறிவு வலிமை மிக்க தேவையானதாகும்.

உண்மையைக் கண்டு பிடிப்பது மனிதனுக்கு நன்மையாயின்—அறிவின் நேர்மையோடு, உண்மை வரவேற்கும் பண்பு மனிதனுக்கு நன்மை பயப்பதாயின், பிறரும் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளை அறிவது நன்மை பயப்பதாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் உண்மையான கருத்துக்கூற வன்மையிருந்தாக வேண்டும். இது உண்மையைக் கண்டுபிடித்தோரையும், வெளியிட்டோரையும் பொது நலன் செய்தோராக்குகிறது.

உண்மையான கருத்துக் கூறுவதைத் தடுப்போரும், தடுக்க முயலுவோரும் நாகரீகத்தின் வைரிகள்—உண்மையின் எதிரிகளாவர். தன் கருத்துக்கூற உரிமை கேட்டு, மற்றவர்கட்கு அவ்வுரிமையளிக்க மறுப்பவன் தன் நலமும், இழிதகையாளனுமாவன்.

சில கொள்கைகள் மிகப் புனிதமானதென்று, அவற்றை மனிதன் தனக்குத்தானே ஆராய்ந்து சோதிக்க உரிமையில்லை என்று கூறுவதுமட்டும் போதாது.

யாருக்குத் தெரியும் அவைகள் புனிதமானவை என்று? நமக்கு உண்மை என்று தெரியாத எதுவாகினும் புனிதமாக முடியுமா?

பல நூற்றாண்டுகளாக உரிமையான பேச்சு கடவுளை இழிவு படுத்துவதாகக் கருதப்பட்டு வந்தது. உண்மையைக் கூறுவது போன்ற தெய்வ நிந்தனை வேறு கிடையாது. பல காலங்களாக அறிஞர்களுடைய உதடுகள் அடைபட்டுக்கிடந்தன. உண்மையேற்றி ஒளிரச் செய்த விளக்குகள் -வலிமை ஏற்றுச் சென்று தனித்து வைத்தவைகளெல்லாம், குருதியினால் அணைக்கப்பட்டன.

உண்மை என்றுமே உரிமை பேச்சுக்கு ஆதரவாக இருந்திருக்கிறது—எப்போதும் ஆராய்ச்சி செய்யக் கோருகிறது-எப்போதும் அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் வேண்டுகிறது. உரிமை, வாதம், நேர்மை, ஆராய்ச்சி, வலிமை இவைகளெல்லாம் உண்மையின் நண்பர்களும், ஆதரவாளர்களுமாகும். உண்மை ஒளியையும், சிறந்த வெளியையும் விரும்புகிறது. அது அறிவிற்கும், நீதிக்கும், சிந்தனைக்கும், எல்லா உயர்ந்த சிறந்த மூளை உணர்விற்கும், வன்மைக்கும் வேண்டிக் கொள்கிறது. அது ஆசைகளை தணிந்து, பொறாமையை அழித்து, அதிகப் பாகங்களாக அறிவைப் பெருக்கிச் சிந்தனையின் சுடரை அதிகரிக்கச் செய்கிறது.

# தியாகம்

வழக்கம் போலத்தான் என் முன்னால் இலை போட்டிருந்தது. வழக்கமாக வைக்கப்படும் சோறு, காய்கறிகள்! இவைகளை ஒவ்வொன்றாக வைத்து விட்டு, அவள்—சரளா என் அருகில் எப்போதும் போலவே—அதே புன்சிரிப்போடு—உட்கார்ந்தாள். அவள் குறுகுறு விழிகள் என் முகத்தை உற்றுப்பார்த்தன. வழக்கமாக இருக்கும் மகிழ்ச்சி—உற்சாகம்—அந்த சிரிப்பு என்னிடம் இன்று இல்லை. அந்த உணவிலும் எவ்வித சுவையும் இருப்பதாக என்னால் அறிய முடியவில்லை. என்னுடைய சிந்தனை எங்கோ இருந்தது! சரளாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்—அதே உற்சாகம், சிரிப்பு!

சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்தேன்! நேராக என் அறைக்குச் சென்று சோபாவில் படுத்தேன்!

நான் மீண்டும் சிந்தனையின் வசமானேன்! அந்த ஒரு வார்த்தை என்னை என்னென்னவோ செய்து கொண்டிருந்தது.

"அடிமை!"

ஆம்! 'அடிமை' என்று சொன்னான்.

எப்போதும் போலவேதான் இன்று காலையிலும் அலுவலகத்தில் நுழைந்தேன்!

உள்ளே கந்தசாமி கத்திக்கொண்டிருந்தான். நான் நின்றேன்!

"என் சார், அந்த 'அடிமை' இன்னும் வரவில்லையா?"

"'அடிமை'யா? யார் சார் அது!"

"அதுதான் சார், அந்தப் பாப்பாத்தியின் அடிமை"

"புரியல்லையே சார்!"

"விளக்கமாகச் சொல்லட்டுமா, சார். அதுதான் நம்ம சுந்தரம் பிள்ளை அய்யர்!"

அதற்குமேல் என்னால் சகிக்க முடியவில்லை. நான் இல்லாத போது என்னைப்பற்றி எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளலாம். ஆனால் நான் அங்கேயே இருக்கும் போது....!

சோபாவில் சற்று சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, ஒரு சிகரெட் பற்ற வைத்தேன்.

என்னுடைய வாழ்க்கையை நானே எண்ணிப்பார்த்தேன். அந்த நினைவு ......என்னுடைய சிந்தனை......!

நான் கல்லூரி இரசாயனசாலையில் எதையோ சோதனை செய்து கொண்டிருந்தேன். என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்தேன். ஆனால் நான் செய்த அவ்வளவும் தப்பாகப் போய்விட்டது! சரி, மத்தியானம் கல்லூரிக்கு வந்து செய்து கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டு வந்துவிட்டேன்.

மாலை இரண்டரை மணியிருக்கும். எதையோ எடை போட்டுக் கொண்டிருந்தேன். எடையைக் குறித்துக் கொண்டு தராசை விட்டுத் திரும்பினேன்! 'ஆ!' என்ற ஒரு இனிய குரல் வந்தது! திரும்பினேன்!

என்னையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த அவள், கொதி நீரில் வைத்திருந்த தர்மாமீட்டரை கையில் எடுத்து விட்டாள். அதன் சூட்டைத் தாங்காமல் 'ஆ' என்று கத்தியும் விட்டாள். கத்தி விட்டும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்....சரளாவைப் பார்த்தேன்!

மாநிறத்தைவிட கொஞ்சம் கறுப்பு! சுருண்ட மயிர்! அது காற்றில் பறந்து கொண்டிருந்தது வெகு அழகாக இருந்தது. நீண்டு தொங்கிய அவளது பின்னல் தரையைத் தொட்டு விடும் போல இருந்தது! அவள் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி......அவள் உடுத்தியிருந்த அந்த ரோஸ் நிற சேலை...! அவள் கண்களுக்கு அபாரமான திறமை இருக்க வேண்டும்! அதற்கு அவ்வளவு கவர்ச்சி இருந்தது! இப்போதும் அவள் கண்களில் அந்தக் கவர்ச்சி இருக்கிறதே!

சரளா...சரளா!

பத்து நாட்கள் இருக்கும் இது நடந்து!

தமிழாசிரியர் கட்டுரைச் சுவடியை எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டு வந்தார். என் சுவடியைக் காணவில்லை. ஆசிரியரிடம் சொன்னேன், 'மாடியில் இருக்கும் ஆசிரியர்கள் அறையில் இருந்தால் பார்த்து எடுத்

ரோஜா முத்தையா
நூலக அறக்கட்டளை

துக் கொண்டுவா!' என்றார்.

மாடிப்படி ஏறி மேலே சென்றேன்.

அதோ சரளா! புத்தகமும் கையுமாக நின்றிருந்தாள். சுற்றிலும் ஒருவரையும் காணோம்! என் காலடியோசை கேட்டுத் திரும்பினாள்! அதே சிரிப்பு; அதே குறும்பு! எங்களுக்கு இடையில் 'இருந்த இடம்' குறுகிற்று! அன்று தமிழ் வகுப்புக்கு 'டோக்கர்!'

அன்று புதன்கிழமை! சரளா என்னை அழைத்தாள்! போனேன். ஒரு வீட்டில் நுழைந்தாள். நான் தாழ்வாரத்திலேயே நின்றேன். சற்று நேரத்தில் பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய வேட்டியுடன் மார்பில் பூணூல் ஆட ஒருவர் வந்தார். அவரோடு சரளாவும் வந்தாள்.

அவர்—அதாவது அய்யர்—பிறகு நான் தெரிந்து கொண்ட முறைப்படி சரளாவின் தந்தை—என் மாமனார்—சொன்னார், 'உன்னைப்பற்றி எல்லாம் கேள்விப்பட்டேன். துரதிர்ஷ்ட வசமாக சரளா உன்னை நேசிக்கிறான். நீ எங்களுடைய கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டு......!' நான் திரும்பி விட்டேன்.

சரளா ஒரு பார்ப்பனப் பெண் என்பதை நான் அப்போதுதான் உணர்ந்தேன். அவர் சொன்ன, 'கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டு......!' என்ற வார்த்தைகள் நினைவுக்கு வந்தன!... 'அகம்பாவம் பிடித்த ஜாதி!'

கல்லூரியில் சரளா, எல்லோர் முன்னாலும் என்னோடு பேசும் துணிவு பெற்றுவிட்டாள்!

சரளாவை நான் காதலித்தேன்—உண்மையாகக் காதலித்தேன்! பார்ப்பனப் பெண்ணைக் காதலித்தேன்!

சரளா என்னைக் காதலித்தாள்—உண்மையாகக் காதலித்தாள்! திராவிட மாணவன் என்று தெரிந்து காதலித்தாள்!

"உங்கள் தந்தையிடம் அனுமதி பெறுங்கள் திருமணத்திற்கு" என்றாள் சரளா.

அவள் துணிவுக்கு ஆச்சரியப்பட்டேன்!

என் அப்பாவிடம் சொன்னேன்!

என் அப்பா, அவள் அப்பாதான்!

சரளாவுக்கு விபரத்தைச் சொன்னேன். அவள் அதை எதிர்பார்த்தே தான் இருந்தாள்! ஒரு புன்னகை! அவ்வளவுதான் அவள் பதில்.

எங்கள் திட்டப்படி சென்னைக்கு வேலைக்கு எழுதிப்போட்டேன். வேலையும் கிடைத்தது.

அப்பாவிடம் சொன்னேன். 'மகராஜனாகப் போய்வா!' என்றார்.

சரளாவின் தந்தையிடம் சென்றோம். 'எப்படியோ போங்கள்' என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டார்.

சென்னையில்!

எங்கள் வீட்டில் பெரியார் படம் ஒன்று மாட்டி இருக்கிறோம். அது தவிர வேறு எந்தப் படமும் இல்லை. ஆமாம் எங்கள் படம் கூடத்தான்!

எனக்கு இப்போது மீண்டும் அவன் சொன்ன 'அடிமை' நினைவுக்கு வருகிறது!

அவளுக்கு—சரளாவுக்கு நான் அடிமையாம்! என் சுகதுக்கங்களில் பங்கு கொள்ள வந்த அவளுக்கு நான் அடிமையாம்! என்பொருட்டு உற்றார் உறவினரைப் பிரிந்து வந்த சரளாவுக்கு நான் அடிமையாம்!

எவனோ ஒருவன், என் நன்மை தீமைகளில் சம்பந்தப்படாத ஒருவன், என்னைப் பற்றி ஏதோ சொன்னான் என்பதற்காக நான் ஏன் துக்கப்பட வேண்டும்?

'அடிமை!'

சரளா!

சரளா! அவளிடம் எந்தவிதமான பார்ப்பன நடைமுறைகளும் இல்லையே! அவள் உடுப்பது நம் பெண்களைப் போலத்தான்! அவள் பேசுவது தூய தமிழ்! உண்மையாகச் சொல்ல வேண்டுமானால் அவள்—அவளையே மறந்து விட்டாள்! அதாவது தான் ஒரு பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவள் என்பதையே மறந்து விட்டாள்!

சரளாவுக்கு கோவில் குளம் தெரியாது! அக்ரஹாரத்துக்குச் சென்றதில்லை! அம்மாமி வார்த்தைகள் அவளுக்கு வராது! அவள் ஒரு அபூர்வப் பிறவி தான்!

அப்போது நான் என் அறையில் தலைவாரிக் கொண்டிருந்தேன். சரளா மோர் வாங்கிக் கொண்டிருந்தாள். மோர்க்காரி மோரைக்கொடுத்து விட்டும் நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து சரளா, "என்ன கமலம்" என்றாள்.

"அம்மா ஒரு சந்தேகம். கோபித்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் என்ன ஜாதி"

"நாங்களா? என்ன ஜாதியா இருந்தால் என்ன கமலம்! எங்களுக்கு ஜாதி கிடையாது. அதை நாங்கள் ஆதரிப்பதும் இல்லை. நாங்கள் திராவிடர்கள் அவ்வளவுதான்!"

ஞாயிற்றுக்கிழமை!

என் அறையில் நான் இருந்தேன். அவளது தோழி—வசந்தா—சென்னைக்கு வந்தவள் சரளாவைப் பார்க்க வந்திருந்தாள். பல நாட்களுக்குப் பிறகு சந்தித்த அவர்கள் அளவளாவிக் கொண்டிருந்தனர். அப்போது வந்திருந்த 'விடுதலை'யை நான் படித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று அவர்கள் பேச்சில் என் கவனம் சென்றது.

"உன் வரையில் ஜாதியை ஒழித்து விட்டாய்!" என்று வசந்தா அனர்ந்தாள்.

"ஆமாம். இந்த இடியட்டுங்க இந்த காலத்திலும் ஜாதி ஜாதின்னு திரியணுங்க!"

"என்ன இருந்தாலும் நீ நம்ம ஆச்சார அனுஷ்டானங்களை—!"

"வசந்தா, நாம் வேறு விஷயத்தைப்பற்றிப் பேசலாம். ஒன்று தெரிந்து கொள். எனக்கு ஜாதியைப் பற்றிய வெறி கிடையாது. ஜாதிகள் ஒழியவேண்டும் என்று நினைக்கிறேன். அவ்வளவுதான்!"

'அடிமை! அடிமை! அடிமை!'

நானா அடிமை?

இல்லை. எங்களில் யாரும் யாருக்கும் அடிமை இல்லை. அவள் சிரிப்பில், குறுகுறு பார்வையில் நான் லயித்து விடுகிறேன். அவளுடைய பேச்சில் சுவைகாண்கின்றேன். அவளுடைய வாதத்தில் நாட்டுக்கு வேண்டிய நல்ல திட்டங்களைக் காணுகின்றேன்.

அவளுக்கு நான் வேண்டும்! எனக்கு அவள் வேண்டும்! ஒருவரை விட்டு ஒருவர் வாழ முடியாது! இதை நாங்கள் உணருகின்றோம்.

எங்களுடைய பேச்சில் திராவிடம், இந்தியா; ஆசியா; உலகம் நடமாடுகிறது.

எங்களுடைய கவனத்தில் பெரியார்; ஜவகர்; ட்ருமன்; ஸ்டாலின் வருகிறார்கள்.

எனக்குத் தமிழ் இனிக்கிறது. அவள் இனிக்கிறாள்!

அவளுக்குத் தமிழ் இனிக்கிறது. நான் இனிக்கிறேன்!

அவ்வளவு தான்.

அவள், தன்னிடம் நான் இருப்பதாக உணர்கிறாள்.

நான், என்னிடம் அவள் இருப்பதாக உணர்கிறேன்.

யார் யாருக்கு அடிமை?

அடிமையாம் அடிமை!

ஆமாம், அவளுடைய பேச்சில் நான் ஏன் கலங்கவேண்டும். தேவை இல்லையே!

அதோ, சரளா வந்து விட்டாள்! பெரியார் கட்சி பேசுபவள் வந்து விட்டாள்! தன்னைத் திராவிடப் பெண் என்று சொல்லிக்கொள்பவள் வந்து விட்டாள்! என்னையே கதியென்று நம்புபவள் வந்து விட்டாள்! தன் வரையில் ஜாதியை ஒழித்தவள் வந்து விட்டாள்! சட்டப்படி என்னை மணந்தவள் வந்து விட்டாள்! எனக்கு மகிழ்வு ஊட்ட வந்து விட்டாள்! என்னைப் பார்த்து மகிழ்வு அடைய வந்து விட்டாள்! அதே முகம்! அதே சிரிப்பு! அதே குறுகுறு பார்வை!

"சரளா! சரளா! சரளா!"

—"ஜயா"

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தையும் பிரிவினையிலும் கலகத்திலும் தொல்லையிலும் இழுத்து விட்டுக்கொண்டு சமாதான பங்கத்தை விளைவித்து மிக்க குறைந்த விலைக்கும் எதையும் காட்டிக் கொடுப்பார்கள் என்பதாகும்.

இந்த இரண்டு காரணங்களும் இன்று நம் நாட்டில் ஆரியர் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களாதியோரிடம் இருந்து வருகின்றன.

முதலாவது ஆரியர்களுக்கு இன்னதேசம் என்பதாகவே ஒன்று இல்லை என்பதோடு, ஆரியர்கள் என்பவர்கள் சரீரத்தினால் பாடுபடாமல் மதம், புரோகிதம், ஜாதி உயர்வு, அரசியல் உத்தியோகம், தேசியத் தலைமை என்கின்றதான சூழ்ச்சித் தொழில்களால் சிறிதும் சரீரப்பாடுபடாமல் மற்ற ஆரியரல்லாத மக்கள் உழைப்பினாலேயே வஞ்சக ஜீவியம் நடத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தங்கள் வாழ்க்கை, தங்கள் ஆதிக்கம் என்பதல்லாமல் மற்றபடி எந்தத்தேசத்தைப்பற்றியோ, எவ்வித ஒழுக்கத்தைப் பற்றியோ, எந்த சமூகத்தைப் பற்றியோ சிறிதும் கவலை இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

இந்தக் காரணத்தாலேயே நமது பழைய ஆதாரங்கள், அகராதிகள் ஆகியவற்றில் ஆரியர்கள் என்றால் மிலேச்சர்கள் என்றும், ஒருவிதக் கழைக்கூத்தர்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இதற்கேற்பவே ஆரியர்கள் இந்த நாட்டில் என்று காலடிவைத்தார்களோ அன்று முதல் இன்று வரை பலவித வஞ்சகங்களாலும், சூழ்ச்சிகளாலும் இந்நாட்டு மக்களை ஏமாற்றி அவர்களை சின்னாபின்னமாகப் பிரித்து ஆபாசக் கற்பனைகளையும் நடத்தைகளையும் வேதமாகவும் மோக்ஷ சாதனமாகவும் ஆக்கி இந்நாட்டு மக்களுக்கு அவர்களே ஆதிக்கக்காரர்களாகவும் "இகம்" "பரம்" இரண்டிற்கும் தர்மகர்த்தாக்களாகவும், சமுதாயம் அரசியல் இரண்டிற்கும் தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும், எஜமானர்களாகவும்கூட தங்களை ஆக்கிக்கொண்டு வருகிறார்கள் என்பதையாரும் மறுக்க முடியாது.

ஆனால் இவர்களது தர்மகர்த்தாத் தன்மையிலும், எஜமானத் தன்மையிலும், வழிகாட்டித்தன்மையிலும் இந்நாட்டுக்கு எந்தத் துறையிலாவது ஏதாவது கடுகளவு முற்போக்கோ, நன்மையோ ஏற்பட்டிருக்கின்றனவென்று யாராவது சொல்லமுடியுமா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தியாவுக்கோ, இந்தியநாட்டு பழம் பெரும் குடி மக்களுக்கோ ஏதாவது ஒரு நன்மை சிறிதளவாவது ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுமானால், அவற்றில் சிறிது முஸ்லீம் அரசர்களாலும் பெரும்பாலும் ஐரோப்பிய ஆட்சியாலும் ஏற்பட்டதென்றே சொல்லலாம்.

அதுவும் ஆரியர்களின் முட்டுக்கட்டையையும், தொல்லைகளையும் சமாளித்து ஏற்பட்டவைகள் என்றுதான் சொல்ல வேண்டுமே ஒழிய, மற்றப்படி ஆரியர்கள் முயற்சியோ, உதவியோ ஒரு சிறிதாவது கொண்டு ஏற்பட்டதென்று எதையும் சொல்ல முடியாது.

மேலும் இன்று அரசியல், சமூக இயல், பொருளியல், அறிவியல் ஆகிய நான்கு துறைகளிலும் இந்நாட்டு மக்கள் அடைந்திருக்கும் ஈன நிலைக்கு இந்த ஆரியர்களே காரணமென்று சொன்னால் அதுவும் மிகையாகாது.

ஆகையால் தேசமில்லாதவர்களும், தேக உழைப்பு இல்லாதவர்களுமான கூட்டம் எந்த நாட்டிற்கும் கேடுவிளைவிக்கக் கூடியது என்பதோடு முக்கியமாக இந்தியாவுக்கு அது ஒரு பெருங்கேட்டையே விளைவித்துக் கொண்டிருப்பதாகவே இருந்து வருகிறது.

இதை நமது பாமரமக்கள் உணராமல் ஏமாந்துபோய் தங்களுக்குத் தாங்களே கேட்டை விளைவித்துக் கொள்ளுகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, இந்நாட்டு ஆரியரல்லாத மக்களில் படித்தவர்களாயும், விஷயமறிந்தவர்களாயுமுள்ள ஒரு கூட்ட மக்கள் இவ்வாரியர்களுக்கு உள் ஆளாயிருந்து சமூகத்தையே அடியோடு காட்டிக் கொடுத்தும்—கெடுத்தும் தாங்கள் வாழ முயற்சிக்கும் இழி நிலைமையை உணரும்போது ஆரிய சுபாவம் இவர்களது ரத்தத்தில் எப்படி ஊறியது என்று ஆச்சரியப்பட வேண்டி இருப்பதை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

## முக்திக்கு வழி

★

"நீ உன்னுடைய முத்திக்கு மாத்திரம் வழிதேடுவாயானால் உனக்கு நரகந்தான் கிடைக்கும், பிறர் நன்மைக்காக உழைத்தால்தான் உனக்கு முத்தி எளிதில் கிடைக்கும். ஆகவே சுயநல முத்தித் தன்மையை விட்டு விடு. அதுவே நீ நன்மையடைவதற்குச் சிறந்த சாதனமாகும்."

விவேகானந்தர்.

## ஏஜண்டுகளுக்கு!

பில் அனுப்பிப் பல நாட்களாகியும், இன்னும் பல ஏஜண்டுகளிடமிருந்து பணம் வரவில்லை. 15ந் தேதிக்குள் பணம் வந்து சேராத ஏஜண்டுகளுக்கு எல்லாம் பத்திரிகை கண்டிப்பாய் அனுப்பப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்,
"குடி அரசு", ஈரோடு.

## அடுத்த வார முதல்

—o—

நம் குடி அரசில் புலவர் குழந்தை அவர்கள் தொடர்ந்து எழுதி வந்த தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம் மீண்டும் (விட்ட இடத்திலிருந்து) அடுத்த வார முதல் தொடர்ந்து வெளிவரும்.

[ஆ—ர்.]

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.